# ஸ்ரீ ராமகிருஷ்ண விஜயம்



ஜனவரி-1981

தை



திருமலை திருப்பதி தேவஸ்தானம், திருப்பதி

# ஸ்ரீவேங்கடேசப் பெருமாள் ஊஞ்சல் சேவை

ஸ்ரீவேங்கடேசப் பெருமாள் எல்லாக் குணங்களையும் அவஸ்தைகளையும் கடந்து விளங்குகிறார். அவர் அவற்றால் பாதிக்கப்படவில்லை; அவைகள் அவரைப் பாதிக்கவும் முடியாது. ஆனால், பக்தர்கள் அந்த ஒப்பற்ற பரம்பொருளைத் தங்கள் உள்ளத்திலேயே உணர்ந்து அனுபவிக்கிறார்கள். ஆகையால் பக்தர்கள், ஸ்ரீவேங்கடேசப் பெருமாள் எப்போதும் உற்சாகமாகவும் சந்தோஷமாகவும் கவலையற்றும் இருந்து, தங்களுக்கு எல்லா விதமான சௌகரியங்களையும் சௌபாக்கியங்களையும் க்ஷேமங்களையும் கொடுத்துக்கொண்டிருக்க வேண்டுமென்று விரும்புகிறார்கள்.

இதுதான் திருமலையில் கண்ணாடி ஹால் எனப்படும் அயன மஹாலில் நாள்தோறும் நடத்தப்படும் ஊஞ்சல் சேவையின் தாத்பரியமாகும். இந்தச் சேவை ஒவ்வொரு நாளும் மாலையில் ஆறு மணிக்குப் பிறகு நடந்து வருகிறது. உற்சவமூர்த்தி அழகாக அலங்கரிக்கப் பெற்ற ஊஞ்சலில் தம் தேவிமார்களுடன் எழுந்தருளுகிறார். கந்தம், சாமர உபசாரங்கள், வேதபாராயணம், பஜனை ஆகியவற்றுடன் ஸ்வாமி லேசாக ஊஞ்சல் ஆடுகிறார்.

மேற்கண்ட ஊஞ்சல் சேவை உற்சவத்தில் பங்குகொள்ள விரும்பும் கிருகஸ்தர்கள் ரூ. 1000 செலுத்தித் தங்கள் குடும்பத்தில் ஆறு பேர்களுடன் இந்த உற்சவத்தில் கலந்துகொள்ளலாம். அவ்விதம் உற்சவத்தில் பங்குகொள்ளும் கிருகஸ்தருக்கு ரூ. 250 பெறுமானமுள்ள தங்க டாலரும் வஸ்திர வெகுமதியும் அளிக்கப்படும்.

எக்ஸிக்யுட்டிவ் ஆபீசர்.

திருமலை திருப்பதி தேவஸ்தானம், திருப்பதி.

# ஸ்ரீராமகிருஷ்ண விஜயம்

| தொகுதி 62 | ஜனவரி — 1982 | இதழ் 1 |
| --- | --- | --- |

பொருளடக்கம்





## ஸ்ரீராமகிருஷ்ண விஜயம்

(மாதப் பத்திரிகை)

வருட சந்தா ... ரூ. 12
ஆயுள் சந்தா ... ரூ. 150
தனிப் பிரதி ... ரூ. 1-20

வாசக அன்பர்கள் தங்களின் சந்தாவைச் செலுத்துவதுடன், மேலும் தமது நண்பர்கள் சிலரையும் சந்தாதாரர்களாகச் சேர்த்துத் தருவது ஒரு நல்ல தொண்டாகும். இந்தப் புனித மதத் தொண்டில் சிரத்தையுடன் ஈடுபடுவது நமக்கும் மற்றவர்களுக்கும் பெருநலன் தரும்.


வாசக அன்பர்கள் தங்களின் தெய்விகக் கைங்கர்யமாக, தங்களால் இயன்ற ஒரு சிறிதளவிற்காகிலும் புதிய சந்தாதாரர்களைச் சேர்த்துத் தரும் விஷயத்தில் முயற்சி செய்யக் கோருகிறோம்.

ஸ்ரீராமகிருஷ்ண விஜயம் காரியாலயம்
ஸ்ரீராமகிருஷ்ண மடம்
மயிலாப்பூர், சென்னை-600 004

# ஸ்ரீ ராமகிருஷ்ண விஜயம்

ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்
நன்றே நினைமின் நமன் இல்லை.
—திருமூலர்

தொகுதி 62 | துர்மதி ஹூ தை மீ | இதழ் 1




वागर्थाविव संपृक्तौ वागर्थप्रतिपत्तये ।
जगतः पितरौ वन्दे पार्वतीपरमेश्वरौ ॥

வாகர்த்தாவிவ ஸம்ப்ருக்தௌ வாகர்த்தப்ரதிபத்தயே ।
ஜகத : பிதரௌ வந்தே பார்வதீபரமேச்வரௌ ॥

*—மகாகவி காளிதாசர், ரகுவம்சம், 1-1*

வாக்கும் அதன் அர்த்தமும் நன்குகப் பெறும்பொருட்டு, வாக்கும் அர்த்தமும் ஒன்றியிருப்பது போல் ஒன்றியிருக்கும் உலக மாதா பிதாவான பார்வதிதேவியையும் பரமசிவனையும் வணங்குகிறேன்.

வேண்டத் தக்கது அறிவாய் நீ
வேண்ட முழுதும் தருவோய் நீ
வேண்டும் அயன்மாற் கரியோய் நீ
வேண்டி என்னைப் பணிகொண்டாய்
வேண்டி நீயாது அருள் செய்தாய்
யானுமதுவே வேண்டி னல்லால்
வேண்டும் பரிசொன்று உண்டென்னில்
அதுவும் உன்றன் விருப்பன்றே.

—மாணிக்கவாசகர்



# ஸ்ரீராமகிருஷ்ணரின் அருள்வாக்கு

**ஞாயிறு, செப்டம்பர் 21, 1884**

பகவான் ஸ்ரீராமகிருஷ்ணரின் அறையில் பக்தர்கள் பலர் குழுமியிருந்தனர். அவர்களுள் ராம், மகேந்திர முகர்ஜி, சுனிலால், ம- ஆகியோரும் இருந்தனர்.

சுனிலால் பிருந்தாவனத்திலிருந்து சமீபத்தில்தான் திரும்பி வந்திருந்தார். ராக்கால், பலராம் ஆகியோரோடு சுனிலாலும் பிருந்தாவனம் சென்றிருந்தார். ராக்காலும் பலராமும் இன்னமும் பிருந்தாவனத்திலிருந்து திரும்பி வரவில்லை. நித்தியகோபாலும் பிருந்தாவனத்தில்தான் தங்கியிருந்தார். குருதேவர் சுனிலாலிடம் பிருந்தாவனத்தைக் குறித்து உரையாடிக்கொண்டிருந்தார்.

ஸ்ரீராமகிருஷ்ணர்: ராக்கால் எப்படி இருக்கிறான்?

சுனிலால்: சுவாமி, அவர் இப்போது மிகவும் நன்றாக இருக்கிறார்.

ஸ்ரீராமகிருஷ்ணர்: நித்தியகோபால் எப்போது திரும்பி வருவார்?

சுனிலால்: அவர் இன்னமும் பிருந்தாவனத்தில்தான் இருந்துகொண்டிருக்கிறார். நான் அங்கிருந்து புறப்பட்டபோது அவரைப் பார்த்துவிட்டுத்தான் வந்தேன்.

ஸ்ரீராமகிருஷ்ணர்: உன்னுடைய குடும்பத்தை யார் திரும்பி அழைத்துக்கொண்டு வருவார்கள்?

சுனிலால்: நல்ல பொறுப்பான ஓர் அன்பரின் துணையுடன் அவர்களை அனுப்பி வைப்பதற்கு பலராம்பாபு ஏற்பாடு செய்வதாகக் கூறியுள்ளார். ஆனால் அந்த அன்பரின் பெயரை பலராம்பாபு என்னிடம் தெரிவிக்கவில்லை.

பிறகு மகேந்திர முகர்ஜியுடன் நாராயணன் என்ற மாணவனைக் குறித்து, குருதேவர் பேச ஆரம்பித்தார். நாராயணனுக்கு அப்போது சுமார் பதினாறு அல்லது பதினேழு வயது இருக்கும். அடிக்கடி அவன் குருதேவரைத் தரிசிக்க வருவது வழக்கம். ஸ்ரீராமகிருஷ்ணரும் அந்த இளைஞன் மீது பெரிதும் அன்பு கொண்டிருந்தார்.

ஸ்ரீராமகிருஷ்ணர்: நாராயணன் மிகவும் சரளமான இயல்பு (கள்ளங் கபடமற்ற மனப்பான்மை) கொண்டவன் அல்லவா?

'சரளமான இயல்பு' என்று சொல்லிக் கொண்டிருந்தபோதே குருதேவர் ஆனந்த பரவசத்தில் ஆழ்ந்தார்.

மகேந்திரர்: ஆம் ஐயனே. அவன் முற்றிலும் சரளமான இயல்பு கொண்டிருக்கிறான்.

ஸ்ரீராமகிருஷ்ணர்: அன்றொரு நாள் அவன் தாய் இங்கு வந்திருந்தாள். அவளுக்கு

இருந்த கர்வத்தைக் கண்டு, எனக்குச் சிறிது அச்சம் உண்டாயிற்று. அதன் பிறகு நீங்களும் காப்டன் விசுவநாத்தும் மற்றும் பல பிரமுகர்களும் அன்றைய தினம் இங்கு வந்திருந்ததை அவள் நன்ருகக் கவனித்துக் கொண்டாள். தானும் தன் மகனும் இந்த இடத்திற்கு (ஸ்ரீராமகிருஷ்ணரிடம்) வருவதால் இந்த இடம் பெரிய அந்தஸ்தைப் பெறுகிறது என்ற தவருன எண்ணம் அவளிடம் இருந்தது. தானும் தன் மகனும் மட்டும்தான் இங்கு வருகிரேம் என்பதில்லை; தங்களைவிட முக்கியமான பல பிரமுகர்களும்கூட இங்கே வந்துகொண்டிருக்கிருர்கள் என்பதை அவள் அன்றையதினம் நிச்சயம் கவனித்திருப்பாள். (அனைவரும் சிரித்தனர்.) அன்றையதினம் இந்த அறையில் கற்கண்டு இருந்தது. அதைப் பார்த்ததும் அவள், ''ஆகா! அருமையான கற்கண்டு!'' என்று பாராட்டிக் கூறினுள். அந்தக் கற்கண்டைப் பார்த்தே இங்கு உணவுப் பொருள்களுக்குக் குறைவு ஏதுமில்லை என்பதை அவள் தெரிந்து கொண்டுவிட்டாள்!

அவள் முன்னிலையிலேயே, ''நாராயணனுக்காகவும் உனக்காகவும் இந்த இனிப்பு வகைகளை எடுத்து வைத்துக்கொள்'' என்று நான் பாபுராமிடம் சொல்லும்படி ஆயிற்று. அதன் பின்பு கனியின் (Gani) தாயாரும் மற்றவர்களும், 'நாராயணன் தட்சிணேசுவரம் வருவதற்கு உரிய படகுக் கட்டணம் தர வேண்டுமென்று தன் தாயாரைத் தொந்தரவு செய்கிருன்' என்று என்னிடம் புகார் செய்தனர். அத்துடன், ''நீங்கள் நாராயணனைத் திருமணம் செய்துகொள்ளும்படி சொல்லுங்கள்'' என்றும் என்னிடம் தெரிவித்தார்கள். அதற்கு, ''இதெல்லாம் அவரவரது தலைவிதியைப் பொறுத்த விஷயம். இதில் நான் ஏன் தலையிட வேண்டும்?'' என்று நான் சொல்லிவிட்டேன். இது போன்ற புத்திமதிகளை நான் ஏன் சொல்ல வேண்டும்? (எல்லோரும் சிரித்தனர்).

''நாராயணன் பாடங்களைச் சரியாகப் படிப்பதில்லை. நன்ருகப் பாடங்களைப் படிக்க வேண்டும் என்று நீங்கள் அவனிடம் சொல்லுங்கள்'' என்றும் அவனது தாய் என்னிடம் கூறிஞள். நானும் நாராயணனிடம், ''டேய்! நன்ருகப் படியப்பா!'' என்று சொன்னேன். அவள் திரும்பவும், ''இன்னும் கொஞ்சம் அவனிடம் வற்புறுத்திச் சொல்லுங்களேன்!'' என்று என்னை வேண்டிஞள். (அனைவரும் சிரித்தனர்.)

ஸ்ரீராமகிருஷ்ணர். (சுனிலாலிடம்): ஏனப்பா, கோபால் ஏன் வருவதேயில்லை?

சுனிலால்: அவருக்கு இரத்தபேதி கண்டிருக்கிறது.

ஸ்ரீராமகிருஷ்ணர்: அவன் அதற்கு மருந்து ஏதாவது சாப்பிடுகிருஞ?

இன்று குருதேவர் கல்கத்தாவிலுள்ள ஸ்டார் தியேட்டரில் 'சைதன்யலீலை' என்ற நாடகம் பார்க்கப் போவதாக இருந்தார். அவரை மகேந்திர முகர்ஜி தம் வண்டியில் கல்கத்தாவுக்கு அழைத்துச் செல்ல ஏற்பாடாகியிருந்தது. தியேட்டரில் எங்கு உட்கார்ந்தால் நாடகத்தை நன்ருகப் பார்க்கலாம் என்பது பற்றிய பேச்சு எழுந்தது.

ஒரு ரூபாய் கட்டணம் செலுத்தி ஏணிப்படி நாற்காலியின் மீது அமர்ந்துகொண்டால் நாடகத்தை நன்ருகப் பார்க்க முடியும் என்று சிலர் கருத்துத் தெரிவித்தனர். ஆனுல் ராம் அந்த யோசனைக்கு ஒப்புக்கொள்ளவில்லை. ஸ்ரீராமகிருஷ்ணரை அது போன்ற சாமான்யமான இடத்தில் அமரச் செய்வது சரியல்ல என்று அவர் கருதினுர். ஆகவே அவர், ''குருதேவர் ஏன் ஏணிப்படி நாற்காலியில் அமர வேண்டும்? பெட்டி என்று சொல்லப்படும் விசேஷ ஆசனத்தில் அவர் அமர்வதற்கு நான் ஏற்பாடு செய்வேன்'' என்ருர்.

குருதேவர் அதைக் கேட்டுச் சிரித்தார்.

சிலர், ''நாடகத்தில் வேசிகள் நடிக்கிருர்கள். ஸ்ரீகிருஷ்ண சைதன்யர், நித்தியானந்தர் போன்ற பாத்திரங்களையெல்லாம் அந்த விலைமாதர்கள்தாம் ஏற்று நடிக்கிருர்கள்'' என்று குறை கூறினர்.

ஸ்ரீராமகிருஷ்ணர் (பக்தர்களிடம்): நான் அவர்களைப் பராசக்தியின் சொருபமாகவே காண்பேன். அவர்களில் ஒருத்தி

ஸ்ரீசைதன்ய தேவராக நடித்தால் அதில் என்ன தவறு இருக்கிறது? மண்ணால் செய்த சீதாப்பழத்தைப் பார்க்கும்போது உண்மையான சீதாப்பழத்தின் நினைவு எழுகிறது.

ஒரு சமயம் ஒரு கிருஷ்ணபக்தன் பாதை வழியாகச் சென்றுகொண்டிருந்தான். அப்போது வழியில் ஓர் இடத்தில் மகிழ மரங்கள் இருந்ததைப் பார்த்தான். அவற்றைப் பார்த்ததுமே அவனுக்குச் சமாதி நிலை கூடிவிட்டது. சியாமசுந்தர் கோவில் தோட்டத்தில் மகிழமரத்தின் கட்டையைக் கொண்டு மண்வெட்டிக்குக் கைப்பிடி போட்டிருந்தார்கள். ஆகவே மகிழ மரங்களைப் பார்த்ததும் அவை அவனுக்கு உடனே கிருஷ்ணனை நினைவூட்டின. ஆதலால் அவன் கிருஷ்ணனைப்பற்றிய சிந்தனையில் தெய்விகப் பரவசத்தில் ஆழ்ந்துவிட்டான்.

ஒரு சமயம் கல்கத்தா மைதானத்துக்கு, ஒரு பலூன் (ஆவிக் கூண்டு) உயரக் கிளம்புவதைப் பார்ப்பதற்கு என்னை அழைத்துச் சென்றார்கள். அங்கு ஓர் ஆங்கிலேயப் பையன் மரத்தின் மீது சாய்ந்தபடி நின்றுகொண்டிருந்தான். அவன் அங்கு நின்ற நிலையில் அவனது உடல் மூன்று இடங்களில் திரிபங்கியாக வளைந்திருந்தது. அவனை அந்த நிலையில் பார்த்ததுமே எனக்கு ஸ்ரீகிருஷ்ணரின் நினைவு வந்தது. அது காரணமாக உடனே நான் சமாதியில் ஆழ்ந்துவிட்டேன்.

கிருஷ்ணசைதன்யர் ஒரு சமயம் ஒரு கிராமத்தின் வழியாகச் சென்றுகொண்டிருந்தார். அப்போது, அந்த ஊரின் களிமண்ணைக் கொண்டு கோல்* என்ற வாத்தியம் செய்யப்படுகிறது என்ற விவரம் அவருக்குத் தெரிய வந்தது. அவ்விதம் கோல் என்ற சொல்லை அவர் கேட்டாரோ இல்லையோ, உடனே அவருக்குச் சமாதிநிலை கூடிவிட்டது.

ஸ்ரீமதி ராதை கார்மேகத்தையோ மயிலின் கழுத்தையோ காணும்போதெல்லாம் பரவச நிலை எய்துவாள். அவை அவளுக்கு ஸ்ரீகிருஷ்ணனை நினைவுபடுத்தி அவளைச் சமாதியில் லயிக்கச் செய்துவிடும்.

பகவான் ஸ்ரீராமகிருஷ்ணர் சிறிது நேரம் மௌனமாக அமர்ந்திருந்தார். சற்று நேரத்திற்குப் பின் மீண்டும் அவர் பேச ஆரம்பித்தார்—''ஆஹா, ஸ்ரீமதி ராதை பக்திபரவசத்தில் எத்தகைய மகோன்னத நிலையை அடைந்திருந்தாள்! கோபியரின் பிரேம பக்தியில் உலக ஆசை எதற்குமே இடமில்லை. பக்தியில் முதிர்ச்சி பெற்ற பக்தன் எந்தவித ஆசையும் கொள்வதில்லை. அத்தகைய உண்மைப் பக்தன் லௌகிகக் கலப்பற்ற சுத்தமான பக்தியை மட்டுமே பகவானிடம் வேண்டிப் பிரார்த்திக்கிறான். அதிசயச் செயல்களை நிகழ்த்தப் பயன்படும் எவ்வித மான சக்தியையோ சித்திகளையோ அவன் கொஞ்சமும் விரும்புவதே இல்லை. சுத்த பக்தியைத் தவிர அவன் பகவானிடமிருந்து வேறு எதையும் வேண்டுவதில்லை.''

---

* கோல்—மிருதங்கத்தைப் போன்ற ஒரு வாத்தியம். மிருதங்கம் மரத்தில் செய்யப்படுவதைப் போல, கோல் களிமண்ணில் செய்யப்படுகிறது. வங்காளத்தில் கீர்த்தனங்களின் போது கோல் வாத்தியம் வாசிக்கப் படுகிறது.

---

உபசாரம் செய்பவனே நண்பனைப் பெறுவான். —ஒரு சாது

ஊகைப் புல்லிலிருந்து ஈர்க்கைப் பிரித்தெடுப்பது போல, வெளியே காணப்படும் பொருள் கூட்டத்திலிருந்து உள்ளுறைவதும், பற்றற்றதும், செயலற்றதுமான ஆத்மாவைப் பிரித்து, அதில் அனைத்தையும் ஒடுங்கச் செய்து, அதன் வடிவமாக அதுவேயாகி, எவன் நிலைபெறுகிறானோ அவன் முக்தி எய்தியவனாகிறான். —விவேக சூடாமணி-153

83-2

# தைப் பொங்கல்

ராஜம் ஐயராமன்

பண்டைக் காலத்தில் இந்துக்கள் இயற்கையையே தெய்வமாக வழிபட்டு வந்தனர். அந்த இயற்கை ஆற்றலையும் பஞ்ச பூதங்களின் வடிவத்திலேயே வழிபட்டனர். அது காரணமாகத்தான் இன்றும் 'பஞ்ச பூதத்தலங்கள்' என்ற சிறப்புத் தலங்களை நாம் போற்றி வழிபடுகிறோம்.

பஞ்ச பூதங்களில் ஒன்றான நெருப்பின் வடிவான சூரியனைக் கடவுளாகத் தமிழ்மக்கள் ஆண்டுதோறும் பொங்கல் திருநாளில் வழிபட்டு வருகின்றனர். இந் நாளில் பொங்கலிட்டு, கோலமிட்டு, மஞ்சளும் இளநீரும் வாழையும் பாலும் அன்னமும் வைத்து மிகவும் விமரிசையாகக் கொண்டாடி வருகின்றனர்.

தட்சிணாயன காலம் முடிந்து உத்தராயண காலம் ஆரம்பிக்கும்போது சூரியனின் போக்கு, தென்திசையிலிருந்து வடதிசையில் மாறுகிறது. பொங்கலன்று சூரியன் தனுர்ராசியை விட்டு மகரராசிக்கு வருவதனால் இந்த நாள் 'மகர சங்கராந்தி' என்று அழைக்கப்பெறுகிறது.

பொங்கல் விழா போகி, பெரும் பொங்கல், மாட்டுப் பொங்கல், கன்னிப் பொங்கல் அல்லது களி நாள் என்று நான்கு தினங்களில் வழிபடுவர்.

'போகி' என்பது இந்திரனுக்குப் பெயர். முதல்நாள் மழைக் கடவுளான இந்திரனுக்கு விழா எடுத்து வழிபட்டனர் பண்டைத் தமிழர்கள். இந்திர விழாவை ஆண்டுதோறும் தமிழ்மக்கள் எவ்வளவு சிறப்பாகக் கொண்டாடினர் என்பதைச் சிலப்பதிகாரம் நன்கு தெரிவிக்கிறது. காலப்போக்கில் இந்த விழாவின் சிறப்புக் குன்றி வீட்டளவில் 'போகிப் பொங்கல்' என்று நாம் கொண்டாடி வருகிறோம்.

மேலும், போகிப் பொங்கலைச் சில பகுதியில் வாழும் மக்கள் சக்தியை வழிபடும் நாளாகக் கொள்கிறார்கள். அன்று சக்தியின் சின்னமான வேப்பிலையை முன்வாயிலில் செருகி, அவள் அருளால் அனைத்தும் நிகழ்கிறது என்று உணர்த்துவர். மாலையில் கும்பம் வைத்து வழிபடுவர். அப்போது சிறுவர் சிறுமியருக்குச் 'சக்தியின் அருட்காப்பு நாண்' என்ற மஞ்சட்காப்பு நாணைக் கையில் அணிவர்.

அன்று வீட்டிலுள்ள பழைய சாமான்களைக் களைந்துவிட்டுப் புதுச் சாமான்களை வைத்து, வீடுகளைப் புதுப்பித்து, பழையன கழிதலும் புதியன புகுதலுமான கொள்கையினை ஏற்றுப் பொங்கல் திருநாளில் புது வாழ்வு காண விழைவர்.

சூரிய வழிபாட்டின் வரலாறு

பொங்கல் விழாவில் இரண்டாம் நாளைப் 'பெரும்பொங்கல்' என்று கூறுவர். இந்நாளைச் சூரியனுக்கு உரிய தினமாக வழிபடுகின்றனர். சிவத்தை வழிபடும் தினமாகவும் கொள்வர். பாரதம் முழுவதும் பெரும்பான்மையினரால் பெரும்பொங்கல் நாளைச் சூரியனின் நாளாக வழிபடுவதே வழக்கில் உள்ளது.

'சூரிய வழிபாடு' பற்றி வேதங்களும் இதிகாசங்களும் சிறப்பித்துப் பேசுகின்றன. கண்ணுக்குத் தெரியும் ஒரே தெய்வம் சூரியனே. இந்தப் பிரபஞ்சத்திற்குச் சூரியனே அடிப்படை.

சூரியனின் முழு ஆற்றலில் இரண்டாயிரம் மிலியனில் ஒரு பகுதிதான் பூமியை அடைகிறது. இதுவே பூமியை அழிக்கவும் காக்கவும் உருவாக்கவும் வலிமை பெற்றது என்று இன்றைய விஞ்ஞானம் கூறுகிறது.

ரிக்வேதம் பத்து ஸூக்தங்களில் சூரியனைத் துதித்துப் போற்றுகிறது. அதில் ஒன்று,

''உன்னுடைய ஒளிமயமான கதிர்கள் எங்களுக்கு ஞானத்தைக் கொடுக்கட்டும். வைகறையில் இருள் நீக்குபவனே! எங்களை நோயிலிருந்து விடுவிப்பாயாக! கம்பீரமான உருவம் கொண்டவனே! எங்களுக்கு உடல்பலத்தைக் கொடு. அறிவின் சுடரே! எங்கள் அறியாமையை விலக்கு'' என்று துதிக்கிறது.

இதிகாசங்களும் சூரிய வழிபாட்டைச் சிறப்பித்துப் பேசுகின்றன. அகஸ்திய முனிவரிடமிருந்து 'ஆதித்யஹ்ருதய' மந்திரத்தை ராமர் பெற்ற பின்னரே அவர் ராவணனை வென்றார் என்றும், பாண்டவர்கள் பன்னிரண்டு ஆண்டுகள் வனவாசம் செய்தபோது அவர்களுக்கு மிகவும் உதவியாக இருந்தது சூரியபகவான் கொடுத்த அக்ஷய பாத்திரமே என்பதையும் நாம் இதிகாசங்கள் மூலம் அறிகிறோம்.

பல இடங்களில் சூரியன் மும்மூர்த்திகளுடன் இணைக்கப்பட்டு 'த்ரைபுருஷ தேவன்' எனப் போற்றப்பெறுகிறான்.

'சந்திரனைச் சடையில் அணிந்த மகாதேவனின் வடிவத்தில் பிறவியை நீக்கி மோட்சத்திற்குச் செல்பவர்களுக்கு வழியாக உள்ளவன் கதிரவன்' என வராகமிகிரர் கூறுகிறார்.

இதுபோல் சந்தியாவந்தனத்தில் வரும் 'நமஸ் ஸவித்ரே ஜகதேகசக்ஷுஷே ஜகத் ப்ரஸூதிஸ்திதிநாசஹேதவே த்ரயீமயாய த்ரிகுணாத்மதாரிணே விரிஞ்ச நாராயண சங்கராத்மநே!!' என்ற சுலோகமும், சூரியன் மும்மூர்த்திகளுடன் இணைந்தவன் என்பதை விளக்குகிறது.

'திருமாலே ஒளிவீசி மன்னுயிர்களுக்கு வாழ்வு தரும் சூரியனாக, ஆகாயம் என்னும் பெருவெளியின் மூலம் தொடர்பு கொண்டு அனைத்துக் கோளங்களையும் இயக்கி வருகின்றான்' என்ற கருத்து மிகவும் பழமையானதொன்று.

கீதையில் கண்ணனும், ''பன்னிரண்டு ஆதித்யர்களுள் நானே சிறந்தவன். நானே சூரியன்'' என்று குறிப்பிடுகிறான்.

முப்பெரும் தேவர்களான பிரமன், விஷ்ணு, சிவன் ஆகியோர்களின் ஒரே வடிவமே சூரியன் என்று கூறுகிறது காயத்திரி மந்திரம்.

இவ்வாறு சூரியனும் விஷ்ணுவும் ஒரே இறைவனே, அவனே சூரியநாராயணன் என்பதை உணர்த்தும் பல குறிப்புக்கள் புராணநூல்கள், தோத்திரங்கள், இலக்கியம் முதலியவற்றில் காணப்படுகின்றன.

எட்டாம் நூற்றாண்டில் சங்கரர் ஷண்மத ஸ்தாபனம் செய்து சூரியனையும் விஷ்ணுவையும் தனித்தனித் தெய்வங்களாக வழிபடுவதற்கு அடிகோலிய பின்பு சூரிய வழிபாடு பின்னும் சிறப்புறலாயிற்று.



சிற்பத்தில் சூரியதேவன்

வடக்கே ஆட்சிபுரிந்த குப்த மன்னர்கள் பலரும் சூரிய உபாசனை செய்ததை, குப்தர் காலச் சிற்பங்கள் உணர்த்துகின்றன.

சூரியநாராயண வழிபாட்டில் சிறந்து விளங்குவது புகழ்பெற்ற கோணார்க் ஆலயமாகும்.

இங்கே சூரியனின் ரத வடிவில் ஆலயம் அமைக்கப்பட்டுள்ளது. இங்குள்ள சிற்பத்தில் திருமாலுக்கு உரிய சங்கும் சக்கரமும் காணப்படுகின்றன. சிற்பம் பத்மபீடத்தில் எழுப்பப்பட்டுள்ளது.

மேலும், பாஜா குகைக் கோயில்களிலும், புவனேசுவரத்துக்கு அருகே உள்ள கண்டகிரி

குகைக் கோயில்களிலும் சூரியச் சிற்பங்கள் காணப்படுகின்றன.

தமிழகத்தில் சோழர்களும் சூரிய வழி பாட்டைப் போற்றி வந்துள்ளனர். அவர்கள் தங்களைச் சூரியகுலத்தில் உதித்தவராகவே கூறுவர். அவர்கள் சூரியனுக்காக அநேக கோயில்களையும், எண்ணற்ற செப்புத் திரு மேனிகளையும் அமைத்துள்ளனர்.

பராந்தகசோழன் தென்னார்க்காடு மாவட் டத்தில் செம்பை கிராமத்தில் 'ஸ்ரீ கண்டரா தித்ய ஆதித்ய கிருகம்' என்ற கோவிலை எழுப்பினான்.

குலோத்துங்கசோழன் தஞ்சை மாவட்டத் தில் சூரியனார் கோயில் என்ற கிராமத்தில் சூரியனுக்கு ஓர் ஆலயம் அமைத்திருக்கிறான்.

கங்கைகொண்ட சோழபுரத்தில் சூரிய னின் யந்திரம் ஒன்றும் காணப்படுகிறது.

இவ்வாறு சூரிய வழிபாடு தமிழகத்தில் தொன்று தொட்டு மலிந்துள்ளமைக்குப் பல சான்றுகள் கிடைக்கின்றன.

சூரிய வழிபாட்டின் பயன்

சூரியனின் ஒளிக்கதிரில் பலவிதச் சக்திகள் இருப்பதாக இன்றைய நவீன விஞ்ஞானம் கூறுகிறது. இந்த உண்மையை மெய்ப்பிக் கும் வகையில் அமைந்த பண்டைய புராண வரலாறுகளும் உண்டு.

சாம்பன் என்பவன் சூரியனை வழிபட்டுத் தொழுநோயிலிருந்து குணமடைந்ததாகவும், அவன் முல்தான் என்னும் இடத்தில் ஆலயம் எடுத்ததாகவும் பவிஷ்ய புராணம் கூறுகிறது.

மயூரன் என்ற கவிஞன் தனக்குக் கண் பார்வை போனதும் சூரியனை வழிபட்டு, 'சூரிய சதகம்' என்ற காவியம் பாடிப்பார்வை பெற்றதாகத் தெரிகிறது. இந்த சுலோகங்கள் காஞ்சி கச்சபேசுவர ஆலயத்தில் கற்சுவர் ஒன்றில் பல்லவ கிரந்தத்தில் வடிக்கப் பட்டுள்ளன. பிருகு மகரிஷியின் மைந்தன் சூரியனை வழிபட்டு இளமைக் கோலம் பெற்ற தாகப் புராண வரலாற்றிலிருந்து அறி கிறோம்.

இவ்வாறு அநேக சான்றுகளால் மக்கள் சூரிய வழிபாட்டின் மூலம் சத்துருநாசம், இளமை, வலிமை, ஆயுள், ஆரோக்கியம், ஆற்றல் போன்றவைகளை அடைந்து நலம் பெற்றுள்ளனர் என்பதை உணருகிறோம்.

வேதகாலம் தொட்டுப் புகழ்பெற்ற சூரிய வழிபாடே பெரும் பொங்கல் நாளாகும்.

அதற்கு அடுத்த நாள் மாட்டுப் பொங்கல். தமிழர்கள் உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்பவர்கள். ஆதலால் அன்று மனித குலத்திற்குப் பல விதங்களில் உதவிபுரியும் மாட்டுச் செல்வத்தை வழிபட்டனர்.

மாட்டுப் பொங்கல் தத்துவம்

'மாடு' என்பது செல்வத்தைக் குறிக்கிறது. 'ஆன்' என்பதற்குச் செலவங்களுக்கு மூல மானது என்பது பொருள். இதனை 'ஆன்' என்றும், 'ஆ' (பசு) என்றும் கூறுவர். இதுவே 'பசுமாடு' என்பதாகும். எனவே செல்வத்திற்கு மூலமானதைப் பசுவின்மூலம் வழிபட்டனர்.

முதல் நாள் போகி சக்தி விழாவாகவும், இரண்டாம் நாள் சிவன்—சூரியன் இவர் களின் விழாவாகவும், மூன்றும நாள் செல்வ வழிபாட்டு விழாவாகவும், நான்காவது நாள் களிநாள், கன்னிப் பொங்கல், காணும் பொங்கல் என்றும் கொண்டாடினர்.

மூன்று நாள் இறைவனை வழிபட்டு அவ னது பொங்கும் அருளில் களித்து மகிழும் நாளே 'களிநாள்' என்றனர். மேலும், அன்று கன்னிப்பெண்கள் நதிக்கரைக்குச் சென்று கூட்டுப்பொங்கல் வைத்து நதியைக் கன்னியாகக் கருதி வழிபடுவர். அதனால் கன்னிப் பொங்கல் என்பதாயிற்று.

அன்று மக்கள் தங்கள் பகைமையை மறந்து இன்பத்தில் திளைத்து ஒருவரை ஒருவர் காண வருவதனால் 'காணும் பொங்கல்' என்றனர்.

இவ்வாறு பொங்கல் திருநாளில் புத்தரிசி கொண்டு, புதுப்பானை வைத்துப் புதுப் பொங்கல் சமைத்து அத்துடன் கரும்பு வாழை செந்நெல் ஆகியவற்றை வைத்துப் இயற்கை யினை வழிபட்டு இறைவனின் அருட்பொங்க லில் திளைத்து மகிழ்வோமாக. ○

# பாரதியார் வாக்கில் விவேகானந்தர்

தொகுப்பு: விவேகானந்ததாசன்

மகாகவி பாரதியின் நூற்றுண்டு விழா தமிழ் பேசுமிடமெல்லாம் விமரிசையாகக் கொண்டாடப்படுகிறது.

கவியரசர் சுப்பிரமணிய பாரதியின் உரைநடைகளிலிருந்து தொகுக்கப்பட்ட சில பகுதிகள் இங்கே தரப்பெறுகின்றன.

விவேகானந்தரின் சற்குருவாகிய ராம கிருஷ்ண பரமஹம்சர், ஸ்ரீவிவேகானந்தர் ஆகிய இவர்களே அதிசமீபத்திலே தோன்றி மறைந்த மகான்கள்.

இவர்களிலே யாவர் மேற்பட்டோர், யாவர் தணிந்தோர் என்று வகுத்துக் கூறுவதற்கு இது சமயமல்ல. அதற்கு நான் அருகனு மல்ல.

சுக்கிர கிரகத்திற்கும் புத கிரகத்திற்கும் உள்ள தாரதம்யத்தைப்பற்றிப் பேசுவதற்கு, பாறைக்குள் இருக்கும் தேரைக்கு என்ன அதிகாரம் இருக்கிறது?

தன்னலம் பாராட்டல், ஆசை, அச்சம் என்னும் குணங்கள் செறிந்த உலக மாயை என்ற பாறைக்கு உட்பட்டிருக்கும் தேரை யாகிய நான் ஞானுகாசத்திலே சர்வ ஸ்வயா தீனமாக ஒளிவீசிக்கொண்டிருக்கும் ஜ்யோதி நட்சத்திரங்களாகிய விவேகானந்தர், ராம கிருஷ்ண பரமஹம்சர் முதலானேர்களின் தாரதம்யத்தைப் பற்றி எவ்வாறு வகுத்துக் கூற மாட்டுவன்?

ஆனல், அந்தப் பாறையிலிருக்கும் ஒரு சிறிய பிளவின் மூலமாக யாதானும் ஒரு தார கையின் ஒளியைக் கண்டு மகிழும் தன்மை தேரைக்கும் இருக்கலாம் அல்லவா?

அது போல் எனக்குத் தெரிந்த மட்டிலே விவேகானந்தச் சுடரின் பெருமையைச் சிறிது பேசத் தொடங்குகிறேன்.

உண்மையான புருஷத்தன்மையும் வீர நெறியும் மனித வடிவெடுத்தாற் போல அவ தரித்திருந்த சுவாமிகளுக்கு அவருடைய தாய் தந்தைகள் 'வீரேசுரன், நரேந்திரன்' என்ற பெயர்கள் கொடுத்திருந்தமை மிகப் பொருத்தமுடையதல்லவா?

இந்த ஜகத்திலே பிரம்மத்தையொழிய வேறென்றுமில்லை என்ற பெருங்கொள் கையை உலகத்தாருக்கு எடுத்துப் போதனை செய்ய வந்த இம் மகான், இந்த ஜகத்திலே தெய்வமே கிடையாதென்ற கொள்கையைச் சிறிது காலம் வைத்திருந்தார். ஆனல், இக் கொள்கை சொற்ப காலத்திற்கப்பால் நீங்கிப் போய்விட்டது.



தட்சிணேசுவர கிராமம் கல்கத்தாவுக்கு வடக்கே நான்கு மைல் தூரத்தில் உள்ளது. மேற்படி கிராமத்திற்கு சுவாமி ஒரு நாள் போய் மகாஞானியைத் தரிசனை புரிந்தார். அந்த ஞானிதாம் புகழ்பெற்ற ராமகிருஷ்ண பரமஹம்சர் என்று கூறவேண்டுவதில்லை.

உலகிற்கெல்லாம் ஓர் புதிய ஒளி கொடுக்கப் பிறந்த மகான் இவர் என்பது அந்த ஞானி யின் திருவுள்ளத்தில் தோன்றிவிட்டது.

உனது கர்மாவின் பலனுகவே உனக்கு இன்பமும் துன்பமும் ஏற்படுகின்றன. ஆகவே வருவதை ஏற்றுக்கொள். அதைத் தியாக உணர்ச்சியோடு சகித்து மகிழ்ச்சியாக இரு.

—ஒரு துறவி

ஆத்மஞானத்தை அல்லது சன்மார்க்கத்தை அஞ்ஞானிகளாகிய மக்களிடையே பரவச் செய்வதோடு, உலகம் முழுவதையும் தானமாக அளிப்பானுயின், பின்னையது முன்னையதற்கு நிறையில் சமமாகாது.

—மகாபாரதம்

---

அப்போது பரமஹம்சர் நரேந்திரருக்கு ஞானநெறியுணர்த்தினுர்.

பிரம்மத் தேனை நரேந்திரருக்கு முற்றிலும் அருந்தி வெறிகொள்ளும்படி செய்துவிட்டார். அந்த மகாஞான வெறி நரேந்திரரை விட்டு ஒருபோதும் நீங்கவில்லை.

பிரம்மக் கள்ளுண்டு, இந்த நரேந்திர பரதேசி பிதற்றிய வசனங்களே இனி, எந்நாளும் அழிவில்லாத தெய்வ வசனங்களாகப் பெருஞானிகளால் போற்றப்பட்டு வருகின்றன.

ஞானேபதேசம் பெற்ற காலம் முதல் நரேந்திரர் தமது பழைய இயற்கையெல்லாம் மாறிப் புதிய மனிதராகிவிட்டார்!

தாய்க்கு மகவின் மீதுள்ள அன்பைக் காட்டிலும், நரேந்திரர் மீது பரமஹம்சர் அதிக அன்பைச் செலுத்தினுர்.

ஆறு வருஷ காலம் நரேந்திரர் தமது குருவுடன் செலவிட்டார். இந்த ஆறு வருஷங்களிலேதான் உலகம் முழுவதையும் கலக்கத் தோன்றியனவாகிய அற்புதப் பேரெண்ணங்கள் இவர் மனதிலே உதித்து நிலைபெற்றன.

வேறு பல சாதாரணச் சன்னியாசிகளைப் போல், சுவாமி விவேகானந்தர் மாதர்களைக் குறித்துத் தாழ்வான கெட்ட அபிப்பிராயங்களுடையரல்லர்.

சர்வ ஜீவர்களும், முக்கியமாக சர்வவித மனிதர்களும், தெய்வங்களைப் போலவே கருதி நடத்துவதற்கு உரியவர் என்ற தம் கொள்கையை, சுவாமி விவேகானந்தர் மிகவும் அழகாக எடுத்துக் காட்டியிருப்பது குறிப்பிடத்தக்க செய்தியாகும்.

நான் பட்சபாதமில்லாமல், அவருடைய அபிப்பிராயங்களை எல்லா மாறுதல்கள் உட்பட எடுத்துக்காட்ட வேண்டுமென்ற உத்தேசமுடையேன்.

'நம்முடைய தேசத்துக்கு விமோசனம் ஏற்பட வேண்டுமானுல் அதற்கு மூலாதாரமாக நம்முடைய ஸ்திரீகளுக்கும் பரிபூர்ண சுதந்திரம் கொடுக்க வேண்டும்' என்றும், 'அவர்கள் வானத்துப் பறவைகள் போல் விடுதலை கொண்டு திரிய இடம் கொடுக்க வேண்டும்' என்றும், 'அவர்கள் பாடசாலைகளிலும் கலாசாலைகளிலும் நிறைந்து கிடக்க வேண்டும்' என்றும், 'தமக்கு வேண்டிய பொருளைத் தாமே உத்தியோகங்கள் பண்ணித் தேடிக்கொள்ள இடம் கொடுக்க வேண்டும்' என்றும், 'ஆண்மக்கள் தொழில் புரியும் எல்லாத் துறைகளிலும் பெண்கள் தொழில்புரிய இடம் தர வேண்டும்' என்றும், 'ஸ்திரீகளை நாம் பொதுவாகப் பராசக்தியின் அவதாரங்களெனக் கருத வேண்டும்' என்றும் சுவாமி விவேகானந்தர் கருதினுர் என்பது தெளிவாகப் புலப்படுகிறது.

சுவாமி விவேகானந்தரின் கல்விப் பெருமையும், அறிவுத் தெளிவும், தெய்விகமான அன்பும், அவருடைய தைரியமும், மேருவைப் போன்ற மனேபலமும் அவர் செய்திருக்கும் உபந்நியாசங்களிலும் நூல்களிலும் விளங்குவதைக்காட்டிலும் அவருடைய கடிதங்களில் ஒருவாறு அதிகமாகவே விளங்குகின்றன என்று கூறுதல் தவருகாது.

சுவாமி விவேகானந்தர் மனுஷ்ய ஜாதியின் கலியை ஒரேயடியாக வேரறுத்துத் தள்ளியிருப்பார் என்று தோன்றுகிறது. அவர்

யோசனை பண்ணாத பெரிய விஷயமே கிடையாது. அவருக்குத் தெரியாத முக்கிய சாஸ்திரம் கிடையாது. அவருடைய அறிவின் வேகத்துக்குத் தடையே கிடையாது. அவருடைய தைரியத்துக்கோ எல்லை கிடையாது. கண்ணபிரான் கீதை உபதேசம் புரிந்து, சகலவித மனுஷ்ய சந்தேகங்களையும் அறுத்து, வேதஞானத்தை நிலைநிறுத்திய காலத்துக்குப் பின்பு, ஹிந்து மதத்தின் உண்மைக் கருத்துக்களை முழுவதும் மிகத் தெளிவாக, சர்வஜனங்களுக்கும் புலப்படும்படி வெளியிட்டுரைத்த ஞானி விவேகானந்தரே யாவார் என்று தோன்றுகிறது.

அமெரிக்காவில் சென்று ஹிந்து மதப் பிரசாரம் பண்ண வேண்டும் என்ற நோக்கத்துடன் சுவாமி விவேகானந்தர் இந்தியாவிலிருந்து ஜப்பானுக்குப் போன மாத்திரத்திலேயே வேதசக்தியாகிய பராசக்தி அவருக்கு ஞானச் சிறகுகள் அருள் புரிந்துவிட்டாள். ஜப்பானிலிருந்து அவர் இந்தியாவுக்கு எழுதிய கடிதங்களில் புதிய ஜ்வாலை தோன்றத் தொடங்கிவிட்டது. நவீன ஹிந்து தர்மத்தின் அக்கினி சக்தி அவருடைய உள்ளத்தில் இறங்கி நர்த்தனம் செய்யத் தொடங்கிவிட்டது. பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதியில் ஐரோப்பிய நாகரிகத்துக்கு ஆதர்ச பூமியாக விளங்கிய அமெரிக்க ஐக்கிய நாடுகளில் ஹிந்து தர்மம் தன் வெற்றிக்கொடியை நிலைநாட்ட வேண்டும் என்று ஈசனுடைய சங்கற்பம் இருந்தது. அதற்கு விவேகானந்தர் கருவியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

ஹிந்து தர்மத்தின் புதுக் கிளர்ச்சிக்கு விவேகானந்தர் ஆரம்பம் செய்தார். அவரைத் தமிழ்நாடு முதலாவது அங்கீகாரம் செய்து கொண்ட பிறகுதான் வங்கம் மகாராஷ்டிரம் முதலிய ஹிந்து தேசத்து மாகாணங்கள் அவருடைய பெருமையை உணர்ந்தன.

காலஞ்சென்ற விவேகானந்த பரமஹம்ச மூர்த்தியே இந்திய சுயாதீனக் கிளர்ச்சிக்கு அஸ்திவாரம் போட்டவர் என்பதை உலகம் அறியும்.

ஸ்ரீ சுவாமி விவேகானந்தர் சிக்காகோவில் நடைபெற்ற சர்வமத சபையில் நமது பாரத நாட்டு ஆரிய சனாதன தர்ம மதத்தைப்பற்றி, சப்த மேகங்கள் ஒன்றுகூடி வருஷித்தது போல் சண்டமாருதமாய்ப் பிரசங்கித்துப் பிற மதஸ்தர்களை வென்று ஜயசீலராய் இந்தியாவிற்குத் திரும்பி வர, போஸ்ட்டன் எனும் துறைமுகத்தில் கப்பலில் ஏறினார்.

ஆகா! சுவாமி விவேகானந்தரைப் போலப் பத்துப் பேர் இப்போது இருந்தால் இன்னும் ஒரு வருஷத்திற்குள் இந்து தர்மத்தின் வெற்றிக் கொடியை உலகமெங்கும் நாட்டலாம். ○

## இறைவன் இல்லாத இடம்

தெலுங்கில் தியாகராஜர் எப்படியோ அப்படிக் கன்னடத்தில் கனகதாஸர். இவருடைய பக்திப் பாடல்களுக்குக் கன்னட நாட்டில் மிக்க மதிப்பு உண்டு.

இவர் வியாசராயர் என்ற மகானுக்குச் சீடராக விளங்கினார். ஒரு நாள் வியாசராயர் எல்லாச் சீடரிடமும், ‘‘ஆளுக்கு ஒரு வாழைப்பழத்தைத் தின்றுவிட்டு வாருங்கள்’’ என்றார். எல்லாச் சீடர்களும் பழத்தை வாங்கிக்கொண்டார்கள். சிலர் மரத்திற்குப் பின்னால் ஒளிந்து கொண்டார்கள்.

சிலர் சுவருக்குப் பின்னால் மறைந்துகொண்டார்கள். இப்படிப் பல மறைவிடங்களைத் தேடிப் பார்த்து அங்கே பழத்தைத் தின்றுவிட்டு வந்தனர்.

கனகதாஸர் மட்டும் பழத்தை வைத்துக்கொண்டு அங்கேயே நின்றார். ‘‘ஏதாவது மறைவிடமாகப் பார்த்துப் பழத்தைப் புசித்துவிட்டு வருவதற்கென்ன?’’ என்று கேட்டார் வியாசராயர்.

அதற்குக் கனகதாஸர், ‘‘மனிதர்கள் இல்லாத இடம் இருக்கலாம்; ஆனால் கடவுள் இல்லாத இடம் இல்லையே? ஆகவே பழத்தை எப்படி யாருக்கும் தெரியாமல் மறைவாகப் புசிக்க முடியும்?’’ என்று கேட்டார்.

# வசந்த பஞ்சமி — மாதர் தினம்

பாரதி ரங்கராஜன்

> இந்த ஆண்டு ஜனவரி 30-ஆம் நாள் வசந்தபஞ்சமித் திருநாளாகும். அதை முன்னிட்டு இந்தக் கட்டுரை இடம் பெறுகிறது.

கல் தோன்றி மண் தோன்றாக் காலத்திலே தோன்றிய பழங்குடி என்று கவியுள்ளம் கொண்டவர்கள் நமது கலாசாரம் மற்றும் பண்பாட்டினைப்பற்றிக் கூறுவது மிகையாக இருக்கலாம். இருப்பினும், உலக நாகரிகங்கள் அனைத்துக்கும் முன்னோடியானது பாரதப் பண்பாடும் கலாசாரமுமே என்பது வரலாற்று ஆராய்ச்சியாளர் அனைவரும் ஒப்புக் கொண்ட உண்மையாகும்.

இந்தப் பழம்பெரும் கலாசாரத்தின் மிக முக்கியத்துவம் வாய்ந்த சிறப்பு யாதெனில், நமது பண்பாட்டிலே பெண்களுக்கு மிகச் சிறந்ததோர் இடம் அளிக்கப்பெற்றது என்பதாகும்.

தொன்றுதொட்டுப் பாரத நாட்டில் கொண்டாடப்பெற்று வருகிற திருவிழாக்களிலெல்லாம் மாதர்களுக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ளது. மாதர்களின் சிறப்பை வெளியிடுவதற்கென்றே பல விழாக்களையும் ஏற்படுத்தியுள்ளனர் நம் மூதாதையர். அப்படி ஏற்படுத்தியுள்ள விழாக்களில் மகர சுக்ல பஞ்சமியன்று கொண்டாடப்பெறும் 'வசந்த பஞ்சமி' விழாவும் ஒன்றாகும்.

இந்த நாட்டின் எல்லாத் திருவிழாக்களுக்கும் புத்துணர்வும் புனிதத் தன்மையும் ஊட்டுகிற மாதர் குலத்தார், வசந்தப் பெண்ணின் வருகையை அறிவிக்கிற இந்தத் திருவிழாவைத் தங்களுக்கென்றே ஏற்படுத்தியுள்ள பெருவிழாவாகக் கொண்டாடுகிறார்கள்.

உலக வரலாற்றை அலசி ஆராய்ந்தோமானால் ஆதிகாலம் தொட்டுப் பெண்களை உயர்ந்த நிலையில் வைத்துப் போற்றி அவர்களுக்குச் சமுதாய ஏணியில் உயர்ந்த இடத்தை அளித்துள்ள பண்பாடு பாரதப் பண்பாடுதான் என்பது புலனாகும்.

நமது பண்பாட்டிற்கு முதல்முதலாக நீதி முறை வழங்கிய மனு தமது தர்மசாஸ்திரத்தில் குறிப்பிடுகிறார்—''எங்கு மாதர் மதிக்கப் பெறுகிறார்களோ அங்கே தெய்வங்கள் மகிழ்கின்றன; எங்கு அவர்கள் மதிக்கப் பெறுவதில்லையோ அங்கே புனித வேள்விகளும் பயன் தரமாட்டா.''

துரதிர்ஷ்டவசமாக நமது பண்பாட்டைப் பற்றி ஆதாரமற்ற அவதூறுகளை எழுப்பும் சிலர் ஹிந்துப் பண்பாட்டின் ஆரம்பகாலத்தில் பெண்கள் இழிவான, கீழ்த்தரமான நிலையில் வைக்கப்பட்டிருந்தனர் என்றும், அவர்கள் அஞ்ஞானத்திலும் வறுமையிலும் அடிமைத் தளையிலும் கட்டுண்டு வாழ்ந்ததோடல்லாமல் ஆண்களின் கொடுமைக்கு ஆளாக்கப்பட்டிருந்தனர் என்றும் பொய்யானதொரு குற்றச் சாட்டைக் கூறுகின்றனர்.

உண்மையில், ஆங்கில மொழியில்தான் 'வீக்கர் ஸெக்ஸ் (Weaker sex) பலம் குறைந்த இனத்தினர்' என்கிற அடைமொழி பெண்களுக்கு அளிக்கப்பட்டுள்ளது. பாரதப் பண்பாட்டில் தொன்றுதொட்டுப் பெண்கள் 'சக்தி'யின் வடிவங்களாகப் போற்றப்பெற்று வந்துள்ளனர்.

"வித்யா: ஸமஸ்தாஸ் தவ தேவி பேதா:
ஸ்த்ரிய: ஸமஸ்தா: ஸகலா ஜகத்ஸு"

''கலைகள் அனைத்தும் உன் வெளித் தோற்றங்கள். உலகமெங்குமுள்ள மாதர் உனது வடிவங்களே'' என்று துர்க்காஸப்தசதியில் அன்னை பராசக்தி புகழப்பெறுகிறாள்.

மனு தமது நீதிசாஸ்திரத்தில் மாதருக்கு உரிமை அளிக்க மறுத்தார் என்று கூறுகிற

வர்கள் மனுதர்மசாஸ்திரத்தையே மறைத்துத் திரித்துக் கூறுகிறவராவர்.

'ஒரு பெண் கன்னியாக இருக்கிற காலத்திலே அவளுடைய தகப்பனுர் அவளுக்குப் பாதுகாப்பு அளிக்க வேண்டும்; அவள் திருமணம் செய்துகொண்ட பிறகு அவளுடைய கணவன் அவளுக்குப் பாதுகாப்பு அளிக்க வேண்டும்; கணவனை இழந்தபிறகு அவளுடைய மக்கள் அவளுக்குப் பாதுகாப்பு அளிக்க வேண்டும்; எந்த நிலையிலும் அவள் தன்னைத் தானே காப்பாற்றிக்கொள்ள வேண்டிய நிலையில் இருக்கலாகாது' என்பதைத் தான் மனு வற்புறுத்திக் கூறியிருக்கிருர்.

அவர் தொடர்ந்து கூறும்போது, 'ஒரு தகப்பனுர் தமது மகளைத் தகுந்த காலத்தில் மணம் செய்து கொடுக்காவிட்டால் குறை கூறப்படுவார்' என்றும், 'ஒரு கணவன் தன் மனைவியைச் சரிவரக் கவனித்துக் கொள்ளாவிட்டால் குறை கூறப்படுவான்' என்றும், ஒரு மகன் தன் தாயின் வயதான காலத்தில் அவளுக்குப் பாதுகாப்பு அளிக்கத் தவறினுல், அவன் குற்றம் புரிந்தவனுவான்' என்றும் அழுத்தம்திருத்தமாக வலியுறுத்துகிருர்.

இதிலிருந்து, மனு விரும்பியது பெண்களுக்கு உரிமைகளும் சுதந்திரமும் மறுக்கப்பட வேண்டும் என்பதல்ல; மாருக, அவர்கள் எந்த நிலையிலும் பாதுகாப்பு அற்றவர்களாக இருக்கக்கூடாது என்பதுதான் என்று புலப்படுகிறது.

மகள், மனைவி, தாய் என்ற மூன்று நிலைகளிலும் பெண்களுக்கு மிக்க மதிப்பும் மரியாதையும் வாய்ந்த நிலையை ஹிந்துப் பண்பாடு அளித்துள்ளது.

இன்று ஆங்கிலத்தில் வழங்கப்படும் 'டாட்டர்' (daughter) என்ற சொல் சம்ஸ்கிருதச் சொல்லான 'துஹிதா—பால் கறக்கிறவள் அல்லது காமதேனுவைக் கறந்து குடும்பத்திற்குச் செல்வச் செழிப்பை ஏற்படுத்துகிறவள்' என்பதிலிருந்து வந்ததாகும்.

ஆகவே, ஹிந்து சமுதாயத்தில் ஒரு பெண் குழந்தை பிறந்தால் அது மேல்நாட்டுக் கலாசாரத்தில் கருதப்பட்டது போல் தேவையில்லாத ஒரு வருகையாக எண்ணப்படவில்லை. மாருக, 'குடும்பத்தின் பெருமைக்கு உரிய பிறப்பாக'க் கருதப்பட்டது. மற்ற ஆண்மக்களைப் போலவே அவளுக்கும் பூர்ணக் கல்வி வசதிகள் அளிக்கப்பட்டன.

ஆயிரமாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு நமது நாட்டில் மைத்திரேயி, கார்கி போன்ற பெரிய ஞானிகள் மாதர்களிடையே தோன்றினர். சொத்துரிமையும் மாதர்களுக்கு வழங்கப்பட்டது.



சீதனம் என்பது இன்று நாம் கருதுவது போலத் திருமணத்திற்காகக் கொடுக்கப்படுகிற 'லஞ்ச'மல்ல; மாருக, ஒரு பெண் தன் தந்தை, தாய், சகோதரன், கணவன், மகன் மற்றும் பல உறவினர்களிடமிருந்து பெற்றுக்கொண்ட பரிசுகளைத்தான் குறித்தது.

மனைவி என்ற முறையில், ஒரு பெண் தன் கணவனுக்குச் சமமான அந்தஸ்தை எல்லா விதத்திலும் பெற்றிருந்தாள்.

திருமணத்தின்பொழுது நடைபெறுகிற 'ஸப்தபதி' என்ற சடங்கில் புதுமணத் தம்பதிகள் ஏழு அடிகள் எடுத்து வைக்கும் பொழுது அவர்கள் வேண்டிக்கொள்வது தங்கள் இருவரின் வாழ்வும் அன்பு, ஒளி, சிறந்த வாய்ப்புக்கள், செல்வச் செழிப்பு, ஆனந்தம், மக்கள்செல்வம் மற்றும் புனிதத் தன்மை நிறைந்ததாக இருக்க வேண்டும் என்பதாகும்.

'உலக வாழ்விலும் ஆன்மிக வாழ்விலும் ஒருவருக்கொருவர் உறுதுணையாக வாழ்

எல்லா உயிர்களிடமும் அன்பு காட்டு. ஈரமும் இரக்கமும் கொண்டு நெஞ்சில் அன்போடு, இரகசியமான பகைமையும் இல்லாமல் நாம் வாழ்வோமாக. இந்த அன்பு பரவுவதற்கு ஓர் எல்லையே இல்லை. இது மிகவும் பெரியதாகவும் எல்லையற்றதாகவும் வளர்ந்து விடும். இந்த அன்பு இருக்கும் இடத்தில் வெறுப்புக்கும் மனக் கசப்புக்கும் இடமே இல்லை.

—புத்தர்

---

வோம்' என்ற விரதத்தை அவர்கள் மேற் கொள்ளும் சந்தர்ப்பமாக இந்தச் சடங்கு அமைகிறது. தங்களிடையே ஏற்படுகிற புனிதமான பந்தம் இறுதி வரையில் இருக்க வேண்டும் என்று இருவரும் வேண்டிக் கொள்ளுகின்றனர்.

இவ்வாறு ஹிந்துக் குடும்பத்தில் மனைவி போகப்பொருளாக அல்ல; மாறாகக் குடும் பத்தினுடைய அஸ்திவாரமாக, இல்லத்தரசி யாக, 'க்ருஹிணி' என்று அழைக்கப் பெறுகிறாள்.

மனைத்தக்க மாண்புஉடையள் ஆகித்தற்
கொண்டான்
வளத்தக்காள் வாழ்க்கைத் துணை

என்ற வள்ளுவரின் குறளுக்கு ஏற்ப, சிறந்த வாழ்க்கைத் துணைவியாக வாழ்கிறவளை 'மனைவி' எனப் போற்றுகின்றனர்.

இல்லத்தரசிகள் பொது வாழ்க்கையில் தீவிரமாக ஈடுபட்டதோடல்லாமல் பொது மேடையில் பேச்சாளர்களாகவும் பலவேறு துறைகளில் உயர்ந்த நிலைகளைப் பெற்றிருந்த வர்களாகவும் ஆட்சிப் பீடத்தில் அமர்ந் திருந்தவர்களாகவும்கூட இருந்துள்ளமைக்கு எண்ணற்ற சான்றுகள் நமது வரலாற்றில் காணக் கிடைக்கும்.

மாதர்குலத்தினர் மட்டும் அடையக்கூடிய ஒரு பெருநிலை—'தாய்' என்ற நிலை. இந்தியப் பண்பாட்டில் மிகச் சிறந்த சிறப்பு வாய்ந்த நிலையாக இது கருதப்பட்டு வந்துள்ளது.

''இந்தியாவிலே ஒரு லட்சியப் பெண்ணாகக் கருதப்படுபவள் தாயாவாள்: முதலாவதாக வும் தாய், கடைசியாகவும் தாய். பெண் என்ற சொல் ஒரு ஹிந்துவின் மனக்கண்முன் கொண்டு வந்து நிறுத்துவது தாய்மை யாகும்; தெய்வமே தாய் என அழைக்கப் படுகிறது'' என்று கூறுகிறார் சுவாமி விவேகானந்தர்.

''உலகின் எந்தப் பகுதியிலும் காணக் கிடைக்காதபடி உயர்ந்த குணங்கள், தொண்டு உணர்வு, அன்பு உணர்வு, தயை, திருப்தி, பயபக்தி போன்ற உணர்வுகளைச் சீதையும் சாவித்திரியும் வாழ்ந்த இந்தப் புனித பாரத மண்ணிலே இன்றும் மாதர் களிடையே காணலாம்'' என்றும் சுவாமி விவேகானந்தர் மொழிகிறார்.

இன்றைய தினம் மேற்கத்திய நாகரிகத் தின் மோகவலையில் சிக்கிப் 'பெண் உரிமை' என்ற பெயரில் ஹிந்து மாதர்குலத்தின் சிறப் பிற்கே களங்கம் விளைவிக்கும் பல கோரிக்கைகள் நாட்டில் எழுவதை நாம் காண்கிறோம். அதிர்ஷ்டவசமாக நாட்டின் பெரும்பான்மையான பெண்மணிகள் இந்த அர்த்தமற்ற பிரசார வலையில் விழவில்லை.

பல நூற்றாண்டுகளுக்கு முன்பு வடமேற்குத் திசையிலிருந்து நாட்டின்மீது படையெடுப் புக்கள் நிகழ்ந்தபொழுது இந்த நாட்டின் பெண்களைப் பாதுகாப்பதற்கெனப் பல பழக்க வழக்கங்கள் ஏற்படுத்தப்பட்டன. அவை யாவும் இன்று தேவையற்றனவாக மாறி யிருக்கலாம். நாட்டின் புதிய முன்னேற்றத் தின் வேகத்தில் இந்தத் தேவையற்ற பழக்க வழக்கங்கள் பெரும்பாலும் மறைந்த நிலையை இன்று நாம் காண்கிறோம்.

ஆண்களுக்கு உள்ளது போலவே சம அந்தஸ்தும் உரிமைகளும் இன்று மாதருக்கும் முழுமையாக அளிக்கப்பட்டுள்ளன. ஆனால் இந்த உரிமைகளின் பெயரில், மேற்கத்திய நாகரிகத்தையும் பண்பாட்டையும் கண் மூடித்தனமாகப் பின்பற்றி, ஆண்களைப் போலப் பெண்களும் கட்டுப்பாடற்ற

வாழ்க்கை நடத்த உரிமை கோரினல் அது பாரதப் பண்பாட்டின் ஆணிவேரையே வெட்டக்கூடிய செயலாகும்.

இன்றைய தினம் மேற்கத்திய நாகரிகத்தைப் பின்பற்றும் பல குடும்பங்களில் ஆண்கள் எப்படி இருப்பினும் அந்தக் குடும்பத்தைச் சார்ந்த மாதர்தாம் தங்களுடைய பரம்பரையில் தொன்றுதொட்டு வந்துள்ள தேசிய, ஆன்மிகக் கோட்பாடுகள் அடியோடு அழிந்துவிடாமல் கட்டிக் காத்து வருகின்றனர்.

நமது பழைய பண்பாட்டிற்கும் வருங்காலச் சந்ததியினருக்கும் இடையே வலுவுள்ள பிணைப்பாக இன்று இயங்குவது மாதர் சமுதாயம்தான். ஆங்கில மோகம் தலைவிரித்தாடிய காலக் கட்டடத்திலும், இந்தியப் பெண்களுக்கெல்லாம் ஆதர்ச மாதாவாகத் தோன்றியவர் அன்னை ஸ்ரீ சாரதாதேவி தாம் என்ற உண்மையை நாம் உணர்கிற பொழுது, இந்த நூற்ருண்டிலும் இந்த நாட்டின் மாதர்களின் உள்ளத்தில் அழியாமல் இலங்குகிற சக்தி இந்த நாட்டின் பழம்பெரும் பண்பாடுதான் என்பது நிருபணமாகிறது.

இந்தப் பண்பாட்டை மாதர்குலத்திற்கு மீண்டும் மீண்டும் நினைவுறுத்தும் வகையில் தான் வசந்த பஞ்சமி போன்ற விழாக்களை நாம் கொண்டாட வேண்டும்.

''பாரத அன்னை புன்னகை பூத்த முகத்துடன் மீண்டும் நம் முன் தோன்ற வேண்டுமானல் முதலாவதாக அவளுடைய புதல்விகள்—வருங்கால இந்திய மாதர்—அவளைச் சூழ்ந்து கொள்ள வேண்டும். அவர்கள் அவளுடைய தாள் பணிந்து தங்களுடைய வாழ்வையும், தங்கள் கணவன்மார், குழந்தைகளுடைய வாழ்வையும் அன்னையின் பாதத்திலே அர்ப்பிக்க வேண்டும். அப்பொழுதுதான் உலக அரங்கிலே அன்னை முடி சூட்டிக்கொண்டு நிற்பாள். இன்று அவளது திருக்கோயில் இருள் சூழ்ந்ததாக இருக்கிறது. இந்திய மாதர் எடுக்கக்கூடிய தேசிய ஆரத்தியில்தான் அவளுடைய திருக்கோயில் ஒளி மிகுந்ததாக மாறும்; அப்பொழுதுதான் புதுப் புலரி தோன்றும்'' என்று சகோதரி நிவேதிதை இந்தியப் பெண்களுக்கு விடுத்துள்ள அறைகூவலை நினைவுகூர்வோமாக. □

## மாமிசம் மலிவா, கிராக்கியா?

ஓர் அரசன் தன் பிரதானிகளைப் பார்த்து, ''மாமிசம் மலிவா, கிராக்கியா?'' என்று கேட்டான். பிரதானிகள் எல்லோரும், ''மாமிசம் மலிவு'' என்ருர்கள். ஆனல் அரசகுமாரன் தகப்பனரைப் பார்த்து, ''மாமிசம் கிராக்கி'' என்ருன்.

இதைக் கேட்ட அரசன், ''உனக்கு அனுபவம் போதாது. அதுதான் மாமிசம் கிராக்கி என்கிருய். என் பிரதானிகள் அனுபவசாலிகள்'' என்ருன்.


அரசகுமாரன் தந்தையைத் தனியே அழைத்து, ''நீங்கள் இரண்டு மூன்று நாள் அரசசபைக்கு வராதீர்கள். நான் சொன்னதுதான் உண்மை என்பதை நிருபிக்கிறேன்'' என்ருன்.

இரண்டு நாள் கழித்து அரசகுமாரன் ஒவ்வொரு பிரதானியாகப் பார்த்து, ''என் தந்தைக்கு உடல்நலம் சரியாக இல்லை. வைத்தியர் தங்கள் இதயத்தின் மாமிசம் ஒரு தோலா வாங்கிவரச் சொன்னர். அதற்குத் தாங்கள் என்ன விலை கேட்டாலும் கொடுக்கத் தயாராக இருக்கிறேன்'' என்ருன்.

அதற்கு ஒவ்வொரு பிரதானியும், ''இந்தா, இந்தப் பணத்தை வைத்துக்கொள். என்னைக் கேட்காதே! வேறு யாரையாவது கேள்'' என்று சொல்லி, நிறையப் பணம் கொடுத்தார். இப்படி எல்லோரும் பணத்தைக் கொடுத்தார்களேயன்றி ஒருவராவது மாமிசம் கொடுக்கவில்லை. இதை அரசகுமாரன் தகப்பனரிடம் சொன்னன்.

அடுத்த நாளே. அரசன் சபைக்கு வந்ததும் பிரதானிகளைப் பார்த்து, ''மாமிசம் மலிவா, கிராக்கியா?'' என்று கேட்டான். எல்லாப் பிரதானிகளும் பதில் சொல்ல முடியாமல் தலையைக் கவிழ்த்தார்கள்.

அப்பொழுது அரசகுமாரன் பிரதானிகளைப் பார்த்து, ''எல்லோருக்கும் அவரவர்களின் மாமிசம் மிக்க விலையுயர்ந்தது; பிறரது மாமிசம் மிக்க மலிவு. அதனல்தான் எந்தப் பிராணியையும் நாம் துன்புறுத்தக்கூடாது, கொன்று அதன் மாமிசத்தை உண்ணக்கூடாது என்று சொல்லியிருக்கின்றனர்'' என்ருன்.




# சிவாஜியின் குருபக்தி

நாடோடி

சமர்த்த ராமதாஸ சுவாமிகளுக்குச் சத்ரபதி சிவாஜியிடம் ஒரு தனி அன்பு உண்டு. சிவாஜி அரசராக இருப்பதால் ராமதாஸ் அவர்மீது தனி அன்பு காட்டுகிறார் என்று மற்றச் சிஷ்யர்கள் நினைத்தார்கள். அவர்களுக்குப் பாடம் கற்பிக்க வேண்டும், உண்மையை விளக்க வேண்டும் என்று சுவாமிகள் நினைத்தார்.

ஒரு சமயம் சமர்த்த ராமதாஸர் தம் சிஷ்யர்களுடன் ஒரு காட்டின் வழியாகச் சென்று கொண்டிருந்தார். அப்பொழுது, தமக்குத் திடீரென்று வயிற்றுவலி ஏற்பட்டுவிட்டது என்று சொல்லி அங்கேயே உட்கார்ந்து விட்டார். என்ன செய்வதென்று தெரியாமல் சிஷ்யர்கள் தவித்தார்கள்.

இதற்கிடையில், சிவாஜியும் சுவாமிகளைத் தேடிக்கொண்டு அவர் இருப்பிடத்திற்குச் சென்றார். அவர் வனத்திற்குச் சென்றிருக்கிறார் என்று கேள்வியுற்று, அவரைத் தேடி, அவர் இருந்த இடத்திற்கு வந்து சேர்ந்தார்.

குரு வயிற்றுவலியால் கஷ்டப்படுவதைப் பார்த்ததும், உடனே வைத்தியரை வர வழைக்க ஏற்பாடு செய்யப் போனார்.

குரு சிவாஜியைப் பார்த்து, "நீ வைத்தியருக்கு ஆள் அனுப்பிப் பலன் இல்லை. இதற்கு ஒரு வைத்தியம் இருக்கிறது! ஆனால் . . . " என்று இழுத்தார்.

சிவாஜி தமது இரு கைகளைக் கூப்பி, குருவை வணங்கி, "ஏன் வைத்தியம் இன்ன தென்று சொல்லாமல் நிறுத்திவிட்டீர்கள்? அது எதுவாக இருந்தாலும் சொல்லுங்கள், அதைக் கொண்டு வந்த பிறகுதான் மறு காரியம்" என்று சொன்னார்.

ராமதாஸர், "இந்த வயிற்றுவலியைப் போக்க, கறந்த சிங்கப் பாலினால்தான் முடியும். அது கிடைப்பது எப்படிச் சாத்தியமாகும்?" என்று சொன்னார்,

"கவலைப்படாதீர்கள், இதோ முயற்சி செய்து பார்க்கிறேன்" என்று சொல்லி, சிவாஜி ஒரு தங்கப் பாத்திரத்தை எடுத்துக்கொண்டு பெண்சிங்கத்தைத் தேடிப் போனார்.

கடைசியில் ஒரு குகையில் இரண்டு சிங்கக் குட்டிகள் விளையாடிக்கொண்டிருப் பதைப் பார்த்தார்.

குட்டிகள் இருப்பதால், அதன் தாய் கட்டாயம் அவற்றைத் தேடிக்கொண்டு வரும் என்று அங்கேயே காத்து நின்ருர்.

சிறிது நேரத்திற்கெல்லாம் தாய்ச் சிங்கம் அந்தக் குகைக்கு வந்தது. குட்டிகள் தாயைக் கண்டதும் குதித்துக்கொண்டு அதன் பக்கம் ஓடின.

ஆனல் அங்கு சிவாஜி நிற்பதைக் கண்டதும் தாய்ச் சிங்கம் சீற ஆரம்பித்தது. சிவாஜி தம் கைகளைக் கூப்பி, தாய்ச் சிங்கத்தை வணங்கி, ''தாயே! என் குருதேவருக்காகக் கொஞ்சம் பால் வேண்டும். தயவு செய்து தர வேண்டும்'' என்ருர்.

சிங்கம் தன் கர்ஜனையை நிறுத்திற்று. சிவாஜி தைரியமாகச் சிங்கத்தின் அருகில் சென்று, அதைக் கறக்க ஆரம்பித்தார். தன் குட்டிகளை நாக்கினல் தடவிக் கொடுப்பது போல, சிவாஜியையும் சிங்கம் நாக்கினல் தடவிக் கொடுத்தது.

பாலை எடுத்துக்கொண்டு சிவாஜி வெளியே வந்ததுதான் தாமதம், சமர்த்த ராமதாஸர் தம் சிஷ்யர்களுடன் அங்கு நின்றுகொண்டிருந்தார்.

''சிவா! எனக்கு வயிற்றுவலி போய்விட்டது. உன் குருபக்தியை இவர்களுக்குக் காண்பிக்கவே அவ்வாறு நடித்தேன்'' என்ருர். □

## பெருந்தன்மை

முன்னெரு காலத்தில் ஒரு மகான் இருந்தார். அவரை யார் என்ன நிந்தித்தாலும் அவருக்குக் கோபம் வராது ஒரு நாள் அவர் சென்றுவிட்டுத் தம் இருப்பிடம் திரும்பிக் கொண்டிருந்தார். வழியில் ஒரு துஷ்டன் அவரைச் சந்தித்துக் கன்னு பின்னுவென்று வைதுகொண்டே அவர் பின்னல் வந்துகொண்டிருந்தான். மகான் ஒன்றும் சொல்லாமல் சிரித்துக்கொண்டே நடந்தார்.

அவருடைய இருப்பிடத்தை அடைய இன்னும் பத்து அடிதான் இருக்கும்; மகான் அங்கு நின்ருர். துஷ்டனைப் பார்த்து, ''அப்பா, என்னை இன்னும் எவ்வளவு திட்ட வேண்டுமோ அவ்வளவையும் இங்கேயே திட்டிவிடு. ஏனெனில் என் இருப்பிடம் வந்து விட்டது. அங்கே என் பக்தர்கள் இருக்கிருர்கள். அவர்கள் உன்னைச் சும்மா விட்டுவைக்க மாட்டார்கள்'' என்ருர்.

இதைக் கேட்டு அந்த அயோக்கியன் வெட்கித் தலைகுனிந்து தன்னை மன்னிக்கும்படி மகானிடம் கேட்டுக்கொண்டான். மகான் அவனை மன்னித்தார்.

x x x

## அனுப்பிய பொருள்

ஒரு கோடீசுவரர் சுவர்க்க வாயிலில் நின்றுகொண்டிருந்தார். சுவர்க்கத்தின் வாயிற்காப்போன் அவரை அழைத்துச் சென்று, அவர் தங்க வேண்டிய ஒரு சிறு குடிசையைக் காட்டினன்.

தூரத்தில் பெரிய பெரிய மாடமாளிகைகள் இருக்க, தமக்கு இந்தச் சிறு குடிசைதான என்று அவர் ஆச்சரியப்பட்டு, வாயிற்காப்போனைப் பார்த்து, ''இத்தனை பெரிய மாளிகைகள் இருக்கும்போது எனக்கு ஏன் இந்தச் சிறு குடிசையைக் காண்பிக்கிருய்?'' என்று கேட்டார்.

அதற்கு அந்த வாயிற்காப்போன், ''நாங்கள் என்ன பண்ணலாம்? நீங்கள் எங்களுக்கு அனுப்பி வைத்த பொருள்களை வைத்துக்கொண்டு இந்தச் சிறு குடிசைதான் கட்ட முடிந்தது!'' என்ருன்.

# எப்படி அடும்?

**கி. வா. ஜகந்நாதன்**

இறைவனை வழிபடுபவர்கள் பல வகையில் வணங்கி இன்புறுவார்கள். அவரவர்களுடைய ஆற்றலுக்கு ஏற்றபடி அந்த வழிபாடு அமையும். காரைக்கால் அம்மையார் சிவபெருமானுக்குப் பாமாலை சூடும் திறமை உடையவர். அவர் அன்பினால் என்ன என்ன காரியம் செய்வார் என்பதைச் சொல்ல வருகிறார்.

அவர் நாவன்மை படைத்தவராதலின் அவனுக்குப் பாமாலை புனைந்து அணியும் ஆற்றல் படைத்தவர்; நாவினால் அழகிய பாமாலையைச் சூடுகிறவர். ஆதலின் முதலில் அதைச் சொல்கிறார்.

நாமாலை சூடியும்.

எல்லாரும் இப்படிச் செய்ய முடியாது. பூமாலை சூடலாம். அம்மையாரோ நாவினால் அழகையுடைய பூமாலையைச் சூடி இன்புறுகிறவர்.

''நாவிலே சித்ர மாகவே கட்டி...
''மாத்ருகா புஷ்ப மாலை கோலப்ரவாள பாதத்தில் அணிவேனோ'' என்று அருணகிரியார் பாடுவார். அவ்வாறு நாவினால் அலங்காரமாகப் பாமாலை சூடும்பேறு பெற்றவர் அம்மையார்.

அன்பாய்
நாமாலை சூடியும்

என்கிறார்.

இறைவனுடைய பொன்னிறம் பெற்ற திருவடிகளைத் தரிசிக்கும்போது அதற்கு அலங்காரம் செய்து பார்க்க வேண்டும் என்ற ஆர்வம் உண்டாகிறது அவருக்கு. ஈசனிடம் நெருங்கி உறவாடும் அன்பையுடைய அவர் அப்பெருமானை, 'நம் ஈசன்' என்று சொல்கிறார். அவருக்கு உள்ளது ஒரே உறவுதான். இறைவனுடைய உறவுதான் அது. ஆகவே,

நாமாலை சூடியும் நம் ஈசன்
பொன் அடிக்கே

என்கிறார்.

குழந்தையின் அழகிய அடிகளைக் கண்டவுடன் தாய்க்கு அவற்றிற்குத் தண்டையும் வெண்டயமும் பூட்டி அலங்காரம் செய்யும் ஆர்வம் உண்டாவது போல அம்மையாருக்கும் உண்டாகிறது. அதனால் அந்த அடியைப் புனைந்து பார்க்க விரும்புகிறார்.

நாமாலை சூடுவது மாத்திரம் அன்று, அந்தப் பொன்னடிக்கு மற்றவர்களைப் போலப் பூமாலையைக் கொண்டு புனையவும் ஆர்வம் பிறக்கிறது. எனவே,

நம் ஈசன் பொன் அடிக்கே
பூமாலை கொண்டு புனைந்து அன்பாய்

என்கிறார்.

அவர் வேறு யாரையும் பாமாலை கொண்டு பாடுபவர் அல்லர்; பூமாலை சூட்டுபவரும் அல்லர். அது செய்தாலும் இறைவனுடைய திருவடிகளுக்கே அர்ப்பணம் செய்கிறவர். அவனுடைய திருவடிகளையன்றி வேறு ஒருவரைப் பாடுவதையோ, மலர்மாலை சூடுவதையோ அறியாதவர் அவர். அவற்றிற்கே பாமாலையையும் பூமாலையையும் சூட்டுகிறவர். ஆகவே பிரிநிலை ஏகாரம் போட்டு,

நம் ஈசன் பொன் அடிக்கே

என்று சொல்கிறார்.

அவருடைய நாவினால் பாமாலை சூடுவார்; இது வாக்கின் செயல். கையினால் பூமாலை புனைவார்; இது காயத்தின் செயல். வாக்கு, காயம் என்னும் இரண்டினாலும் இறைவனுக்கு

**ஸ்ரீமத் சுவாமி விவேகானந்தரின் 120ஆவது ஜயந்தி விழா 1982 ஜனவரி 16-ஆம் நாள் சனிக் கிழமை வழக்கம்போல் விமரிசையாக, சென்னை, ஸ்ரீராமகிருஷ்ண மடத்தில் நடைபெறும்.**

மாலை புனைந்து வழிபடும் அவர் மனத்தினாலும் அவனையே தியானம் செய்கிறவர். அவனை எப்போதும் ஓர்கின்ற அறிவை உடையவர். நல்லவற்றையும் அல்லாதவற்றையும் சிந்திக்கும் இயல்புடையது மனம். நல்ல மனம் உள்ளவர்கள் நல்லவற்றையே எண்ணுவார்கள். அல்லாதவர்கள் அல்லாதவற்றையே நினைப்பார்கள். நாம் இரண்டு வகையான எண்ணங்களையும் உடையவர்கள். அம்மையாரோ எது எண்ணினாலும் அந்த எண்ணம் இறைவனோடு தொடர்புடையதாகவே இருக்கும். மனம், வாக்கு, காயம் என்னும் மூன்று கரணங்களாலும் அவனுடைய வழிபாட்டைச் செய்கிறவர் அவர்.

அவர் தம் அறிவினால் இன்னது செய்வதே நலம் என்பதை நன்கு அறிந்தவர். ஆகையால் வேறு எதை எதையோ பற்றிக்கொண்டு அல்லற்படும் அறிவு அவரிடம் இல்லை. இறைவனை எப்போதும் ஒரும் அறிவையே அவர் தமக்கு உரியதாகப் பெற்றவர்.

நாம் ஓர்
அறிவினையே பற்றினால்.

உடம்பாலே வழிபடுவது எளிது; வாக்காலே வழிபடுவது அதைவிடச் சற்றுச் சிரமம் ஆனது. மனத்தாலே ஓர்ந்து தியானம் செய்வது அதைவிட அருமை. ஆனால் மெய்யன்பர்கள் மனத்தின் வழியே செல்லாமல், அதை வழிப்படுத்தி இறைவனிடம் ஈடுபடுத்துவார்கள்.

"சிந்தனை நின்றனக்கு ஆக்கி"
என்று மாணிக்கவாசகர் பாடுவார்.

அம்மையார் மூன்று கரணங்களையும் இறைவனுடைய வழிபாட்டில் ஈடுபடுத்தியதால் அவருக்கு ஒரு தைரியம் பிறக்கிறது. பணம், கல்வி, உடல்வன்மை ஆகியவற்றை உடையவர்களைத் துணையாகப் பெற்றவர்கள் தமக்கு அவை இல்லாவிட்டாலும் தம் நண்பர்களின் பலத்தினால் தைரியமாக இருப்பார்கள். எல்லாரையும்விட வல்லமையை உடையவன் இறைவன். அவன் எல்லாம் வல்ல பெருமான்.

அருள் என்னும் அருஞ் செல்வத்தைப் படைத்த பெருஞ் செல்வன் அவன். எல்லாம் அறிந்த சர்வக்ஞன். அவனுடைய நல்ல துணையைப் பெற்றவர்களுக்கு எதனாலும் குறை உண்டாகாது. குறைவிலா நிறைவாகிய ஈசனைப் பற்றியவர்களும் குறைவிலா நிறைவோடு இருப்பார்கள். 'நமக்கு என்ன குறை?' என்ற செம்மாப்பு அவர்களுக்கு உண்டாகும்.

"நாம் ஆர்க்கும் குடியல்லோம்,
நமனை அஞ்சோம்,
நரகத்தில் இடர்ப்படோம்,
நடலை இல்லோம்;
ஏமாப்போம், பிணி அறியோம்
இனைவோம் அல்லோம்;
இன்பமே எந்நாளும்;
துன்பம் இல்லை"

என்ற பெருமிதம் அவர்களிடம் எழும். அந்த நிலையில் அம்மையார், "இனி நாம் எதற்கு அஞ்ச வேண்டும்?" என்று இறுமாந்து பேசுகிறார். காலனுக்கும் அஞ்சாத மனத்திண்மை உண்மையன்பர்களுக்கு இருக்கும்.

நம்மையெல்லாம் பாவங்கள் பற்றிக் கொண்டு துன்புறுத்துகின்றன; அடுகின்றன. மெய்யன்பர்களிடம் அவை அணுகுவதில்லை. அவர்களைக் கண்டாலே தூர விலகிப் போகும். ஆகையால் அந்த வினைகளைப் பற்றிய அச்சம் அவர்களுக்கு இராது. 'பிறரை அடுகின்ற வினை நம்மிடம் எப்படி வரும்? அவை நம்மை என்ன செய்யும்?' என்று மிடுக்குடன் சொல்வார்கள். மற்றவர்களை, இருள் செறிந்து வந்து மூடிக் கொண்டு மயக்குவது போலத் துன்புறுத்தும் வினைகள் அவர்களை ஒன்றும் செய்ய

முடியாமல் அகன்று போகும். 'எறிகின்ற வினை என்னும் இருள் நம்மை எவ்வாறு துன்புறுத்தும்? எதற்காகத் துன்புறுத்தும்?' என்று கேட்கிறார் அம்மையார்.

> எற்று ஏது அடுமே
> எறிவினையே என்னும் இருள்?

பாவங்களால் சூழப்பெற்றவர்கள் இருளில் வழிதெரியாமல் தடுமாறுகிறவர்களைப் போலக் கலங்குவார்கள். பாவங்களின் தொடர்பு இல்லாதவர்கள் ஒளியில் நடப்பவர்களைப் போல அஞ்சாமல் நடை போடுவார்கள். எங்கிருந்து எது வந்து தாக்குமோ என்று அஞ்சும் நிலை அவர்களுக்கு இல்லை. அந்த உறுதியான ஒளிநிலத்தில் நடை போடும் அம்மையார், "வினைகள் நம்மை என்ன செய்யும்?" என்று கேட்கிறார்.

தம் நெஞ்சை நோக்கி இந்தக் கேள்வியைக் கேட்கிறார். பாட்டில் நெஞ்சை விளிக்கும் விளி இல்லாவிட்டாலும் குறிப்பினால் அதை விளித்துச் சொல்வதாகக் கொள்ள வேண்டும். அவருக்கு நெருக்கமாக உள்ளது ஆதலினால் அதனிடம் சொல்கிறார். "நெஞ்சமே, நீ அஞ்சாதே; நம்மை எது என்ன செய்யக் கிடக்கிறது?" என்று பேசுபவரைப் போல அவர் சொல்கிறார்.

> நாமாலை சூடியும் நம்ஈசன் பொன்அடிக்கே
> பூமாலை கொண்டு புனைந்துஅன்பாய்—
> நாம்ஓர்
> அறிவினையே பற்றினால் எற்றுஏது அடுமே
> எறிவினையே என்னும் இருள்?

என்னுடைய நெஞ்சமே, நாம் நமக்கு உறவாகிய சிவபெருமானுடைய பொன் வண்ணத் திருவடிகளுக்கே நாவினால் அன்பால் பாமாலை சூடியும், பூமாலையைக் கொண்டு அலங்கரித்தும், அவனை நினைக்கும் அறிவினையே பற்றி வாழ்ந்தால், பிறரை மோதித் துன்புறுத்தும் தீவினையாகிய இருள் நம்மை எவ்வாறு எதற்காக வந்து அடும்?

[நாமாலை-நாவினால் புனைந்து பாடும் பாமாலை. அன்பால் பொன்னடிக்கே என்பவற்றை நாமாலை சூட்டுவதற்கும் பூமாலை புனைவதற்கும் கொள்ள வேண்டும். நம் ஈசன் என்றது பக்தியினால் உண்டான உறவின் வலிமையைக் குறிப்பது. பொன் அடி-பொன் வண்ணத்தை உடைய அடிகள்; பொன்னைப் போல உள்ளத்தே பொதிந்து வைப்பதற்கு உரிய அடிகள், என்றும் பொலிவு பெற்ற அடிகள் என்றும் பொருள் கொள்ளலாம்; பொன்-பொலிவு. அடிக்கே என்பதில் உள்ள ஏகாரம் பிரிநிலை; வேறு எதையும் வழிபடாமையைக் குறித்தது. புனைந்தும் என்ற எண்ணும்மை செய்யுள் ஓசை நோக்கித் தொக்கது; செய்யுள் விகாரம். ஓர்தல்-இடைவிடாது நினைத்தல். அதைச் செய்வது அறிவு. அந்த அறிவைப் பற்றி, விடாமல் தியானிப்பது அன்பர் இயல்பு. எற்று-எவ்வாறு. இறைவனுடைய திருவடிகளையே வேறு பற்றறப் பற்றினவர்களுக்கு வினைகளால் உண்டாகும் துன்பம் இராது. ஒளிமயமான பொன்னடியைப் பற்றினவர்களை வினை என்னும் இருள் சாராது. விளக்கைப் பிடித்தவர்கள் இருளுக்கு அஞ்சாமல் இருப்பது போல இருப்பார்கள். அடுமே, வினையே! ஏகாரம், அசைநிலைகள்.

அன்பாய் அடிக்கே சூடியும் புனைந்தும் பற்றினால் இருள் எற்று ஏது அடும் என்று கூட்டுக. எற்று-எப்படி. ஏது—எவ்வாறு, எதனால், எந்த அளவில் என்று பலவகையில் பொருள் கொள்ளலாம்.]

இறைவனை வழிபடுகிறவர்களுக்கு வினையினால் வரும் துன்பம் இல்லை என்பது கருத்து.

அற்புதத் திருவந்தாதியில் உள்ள 87-ஆவது பாடல் இது. □

---

நன்கு கற்றுணர வேண்டிய வேத நூல்களோ ஏராளமாக இருக்கின்றன. ஆனால் நமக்கு இருக்கும் காலமோ மிகவும் குறைவு. தடைகளோ பல. ஆகவே ஒருவன் நீரும் பாலும் கலந்துள்ள பாலில் பாலை மட்டும் பிரிக்கும் அன்னம் போல, வேதசாரத்தைக் கிரகித்து அதையே ஆராதித்தல் வேண்டும்.

—உத்தர கீதை

# அருள்நெறிக் கதை

## தங்கள் ராஜ்யம் எவ்வளவு தூரம்?

'நாடோடி'

ஜனக மகாராஜரது ராஜ்யத்தில் ஓர் அந்தணன் பெருந்தவறொன்று செய்துவிட்டான். அவனைத் தண்டிப்பதற்காக ஜனகர் அவனைப் பார்த்து, ''நீர் என் ராஜ்யத்தை விட்டு வெளியே போய்விடும்'' என்றார்.

இதைக் கேட்ட அந்தணன், ''தங்கள் ராஜ்யம் எவ்வளவு தூரம் பரவியிருக்கிறது என்று தெரிவியுங்கள். அது தெரிந்தால் நான் தங்கள் ராஜ்யத்தின் எல்லையை விட்டு வெளியே செல்லச் சௌகரியமாக இருக்கும்'' என்றான்.

இதைக் கேட்டு ஜனகர் யோசனை செய்ய ஆரம்பித்தார். முதலில் பூமி முழுவதும் தம் அதிகாரம் பரவியிருப்பதாக அவருக்குத் தோன்றிற்று. பிறகு யோசனை பண்ணிப் பார்த்ததில் தம் அதிகாரம் மிதிலாபுரியில் மாத்திரமே இருப்பதாகத் தோன்றியது. இன்னும் யோசனை செய்ததில் தம் அதிகாரம் தம் அரண்மனையில் மட்டும் செல்லுவதாகத் தோன்றிற்று. பிறகு இன்னும் யோசனை பண்ணிப் பார்த்ததில் தமது உடல் மீது மட்டும்தான் தமக்கு அதிகாரம் இருப்பதாக அவருக்குத் தோன்றிற்று. இன்னும் யோசனை பண்ணியதில் அந்த உடல்மீதும் அதிகாரம் இருப்பதாக அவருக்குத் தோன்றவில்லை.

ஆகவே அவர் அந்தணனைப் பார்த்து, ''என் அதிகாரத்திற்கு உட்பட்ட வஸ்து உலகத்தில் எதுவும் இருப்பதாகத் தெரியவில்லை. ஆகவே நீர் எங்கு வேண்டுமானாலும் உமக்கு இஷ்டப் பட்ட இடத்தில் இருக்கலாம்'' என்றார்.

''இத்தனை பெரிய ராஜ்யத்தை வைத்துக்கொண்டு தங்களுக்கு யார்மீதும் அதிகாரம் கிடையாது என்று சொல்லுகிறீர்களே, எப்படி?'' என்று அந்தணன் கேட்டான்.

ஜனகர் தம் மனதில் தோன்றிய எண்ணங்களைக் கூறியதும் அந்த அந்தணன் உருமாற, அவன் நின்ற இடத்தில் தருமதேவன் நின்றுகொண்டிருந்தான். ''நான் தருமதேவன். உன்னைப் பரீட்சிப்பதற்காகத்தான் அந்தணன் வேஷத்தில் வந்தேன். உன்னைப் போன்ற பிரம்மநிஷ்டர்களை நான் பார்த்ததில்லை'' என்று சொல்லி அவன் மறைந்தான்.

## வாழும் வழி

முன்னொரு சமயம் ஒரு நாட்டை ஓர் அரசன் ஆண்டு வந்தான். அரச காரியங்களைக் கண்ணும் கருத்துமாகக் கவனித்து வந்தான். இருந்தும் அவனுக்குத் திருப்தி ஏற்படவில்லை. ஏனெனில் தினமும் புதுப் புதுப் பிரச்னைகள் தோன்றிக்கொண்டேயிருந்தன. அவற்றைச் சமாளிப்பதற்குள் இன்னும் பல புது பிரச்னைகள் தோன்றின.

அலுத்துப் போய் அரசன் ஒரு நாள் பக்கத்துக் காட்டில் வசித்துக்கொண்டிருந்த தன் குருவை அடைந்தான். அவர் காலில் விழுந்து, ''குருவே! என்ன பண்ணுவது என்று தெரியவில்லை. தினம் புதுப் புதுப் பிரச்னைகளைச் சமாளித்துச் சமாளித்து எனக்கு அலுத்துவிட்டது. தாங்கள்தாம் இதற்கு ஏதாவது வழி சொல்ல வேண்டும்'' என்று கேட்டான்.

அதற்குக் குரு, ''அரசாங்கத்தை நிர்வகிப்பது அத்தனை கஷ்டமாக இருக்கிறது என்றால் அதை விட்டுவிடேன்'' என்றார்.

''எப்படி விட்டுவிடுவது! நான் விலகினால் அரசகாரியங்களை யார் கவனிப்பார்கள்? நாடு குட்டிச்சுவராக அல்லவா போய் விடும்?''

''அரசாங்கத்தை உன் மகனிடம் ஒப்படைத்து நீ காட்டுக்கு வந்துவிடேன். என்னைப் போல நிம்மதியாக இரேன்!''

''என் மகன் மிகவும் சிறுவன். என்னாலேயே தாங்க முடியாத அரசபாரத்தை அவனால் தாங்க முடியுமா?''

''அப்படியானால் ஒரு வழி சொல்கிறேன், கேள். உன்னைவிடக் கெட்டிக்காரன் என்று நினைத்துத்தான் நீ என்னை யோசனை கேட்க வந்திருக்கிறாய். ஆகவே உன் ராஜ்யத்தை என்னிடம் ஒப்படைத்துவிடு. நான் கவனித்துக்கொள்கிறேன்.''

''ஆகா! எனக்கு மிகவும் சந்தோஷம். என் ராஜ்யத்தை நீங்கள் எடுத்துக்கொள்ளுங்கள். நான் வேண்டாமென்று சொல்லவில்லை.''

''அப்படியானால் உன் ராஜ்யத்தை எனக்குக் கொடுக்கிறேன் என்று சத்தியம் செய்து கொடு.''

''இதோ, என் ராஜ்யம் இனி உங்களுக்கு'' என்று அரசன் சத்தியம் செய்து கொடுத்துவிட்டு, அரண்மனை திரும்பக் கிளம்பினான்.

''எங்கே செல்கிறாய்?'' என்று கேட்டார் குரு.

''அரண்மனைப் பொக்கிஷத்திலிருந்து கொஞ்சம் பணம் எடுத்துக்கொண்டு அடுத்த நாட்டுக்குப் போய் வியாபாரம் செய்து பிழைக்கலாம் என்று பார்க்கிறேன்.''


''அரண்மனைப் பொக்கிஷம் எல்லாம்தான் இப்பொழுது எனக்குச் சொந்தமாகிவிட்டதே! என் உத்தரவின்றி எப்படிப் பணம் எடுப்பாய்?''

''தாங்கள் சொல்வது சரிதான். அப்படியானால் வேறு எங்காவது சென்று வேலை செய்து பிழைக்கலாம் என்று பார்க்கிறேன்.''

''வேறு எங்கோ எதற்காகச் செல்ல வேண்டும்? எனக்கோ இத்தனை பெரிய ராஜ்யம் இருக்கிறது. நீ என்னிடமே ஏதாவது வேலை செய்து பிழைக்கலாமே!''

''என்ன வேலை உண்டோ சொல்லுங்கள், செய்கிறேன்.''

''நீயோ அரசனாக இருந்து பழக்கப்பட்டவன். ஆகவே இந்த ராஜ்யத்தை எனக்குப் பதில் கவனி. உனக்குச் சம்பளம்தான் உண்டு. என் ராஜ்யத்தில் ஏற்படும் நல்லது கெட்டதைப்பற்றி நீ கவலைப்படத் தேவையில்லை. அதைப்பற்றிக் கவலைப்பட வேண்டியது என் பொறுப்பு. நீ உனக்குத் தெரிந்தவரை இந்த ராஜ்யத்தைப் பரிபாலி. அதற்கு உள்ள சம்பளத்தை மாதமாதம் என்னிடமிருந்து பெற்றுக்கொள்'' என்று குரு சொன்னார்.



சரி என்று சொல்லி அரசன் அன்றுமுதல் குருவின் சேவகனாக இருந்து அரசகாரியங்களைக் கவனிக்க ஆரம்பித்தான்.

என்ன ஆச்சரியம்! முன்பு என்ன காரியங்களைச் செய்தானோ அதையேதான் இப்பொழுதும் செய்தான். ஆனால் எத்தனையோ மன நிம்மதியுடன் செய்தான். இரவு நிம்மதியாகத் தூங்கினான். தன்னால் தவிர்க்க முடியாத தவறு அரசாங்கத்தில் ஏற்பட்டால் அதைப்

பற்றி முன்னைப் போலக் கவலைப்பட மாட்டான்.

''என்றால் ஆனதை நான் செய்தேன். அதற்கு மேல் தவறு ஏற்பட்டால் நான் என்ன செய்வேன்? அரசாங்கமோ குருவினுடையது. அது அவர் பொறுப்பு'' என்று நிம்மதியாகத் தன் காரியங்களைக் கவனித்துக் கொண்டிருந்தான்.

ஒரு மாதம் கழித்து, குரு அவனைப் பார்க்க வந்தார்.

''எப்படி இருக்கிறது புது வேலை?'' என்று கேட்டார்.

''எத்தனையோ நிம்மதியாக இருக்கிறேன்'' என்றான் அரசன்.

''அரசாங்கம் உன்னுடையது என்று நினைத்துக்கொண்டிருந்தபடியால் நீ அவதிப்பட்டாய். அரசு உன்னுடையது அல்ல என்ற நினைவு வந்ததும் உனக்கு நிம்மதி ஏற்பட்டுவிட்டது. இந்த அரசு உனக்கு முன்னாலும் இருந்தது; உனக்குப் பின்னாலும் இருக்கப்போகிறது. ஆகவே பற்றற்றுக் கடமையைச் செய்தால்தான் மனிதன் இன்பமாக வாழலாம். இந்தப் பாடத்தை உனக்கு அறிவுறுத்துவதற்காகத்தான் அரசை எனக்குக் கொடுக்கச் சொன்னேன்'' என்றார் குரு.

## முனிவர் தந்த விளக்கம்

கடவுள்பக்தி வாய்ந்த ஓர் அரசன் ஒரு முனிவரின் பர்ணசாலைக்கு அடிக்கடி போவது வழக்கம். அரசன் முனிவரைத் தன் அரண்மனைக்கு வரவேண்டுமென்று கேட்டுக் கொள்வான். ஆனால் முனிவர் மறுத்துவிடுவார். ''அங்கு வெறும் நாற்றமாக இருக்கும். ஆகவே அங்கு என்னால் வர முடியாது'' என்று பதில் சொல்லுவார். அந்தப் பதில் அரசனுக்குச் சற்று வேதனையளித்தது. இருந்தாலும் பதில் சொல்லாமல் அரசன் வாயை மூடிக்கொண்டு இருப்பான்.

ஒரு நாள் அரசனும் முனிவரும் தெருவழியாக நடந்து சென்றுகொண்டிருந்தனர். வெயில் மிகவும் கடுமையாக இருந்ததனால் இருவரும் ஒரு மரத்தடியில் நிழலுக்காக நின்றனர். பக்கத்தில் சக்கிலியர் வசிக்கும் கிராமம் இருந்தது. அங்கிருந்து வரும் நாற்றம் சகிக்காமல் அரசன் மிகவும் அவதிப்பட்டான். முனிவரைப் பார்த்து, ''நாற்றம் சகிக்கவில்லை. இங்கிருந்து போய் விடலாமா?'' என்று கேட்டான். முனிவர் அவனைப் பார்த்து, ''எப்படி நாற்றம் என்று சொல்லுகிறாய்? அதோ பார், எத்தனை சக்கிலியர் ஆடிப் பாடிக்கொண்டிருக்கிறார்கள், சமையல் செய்துகொண்டிருக்கிறார்கள், விளையாடிக்கொண்டிருக்கிறார்கள்!'' என்று கேட்டார். அதற்கு அசரன், ''அவர்களுக்கு அந்த நாற்றத்திலேயே இருந்து இருந்து மூக்குச் செத்துவிட்டது நாற்றம் இருப்பதே அவர்களுக்குத் தெரியாது. அதனால்தான் அத்தனை குஷியாக இருக்கிறார்கள்'' என்றான்.

உடனே முனிவர், ''உன் அரண்மனை நாற்றமடிக்கும் என்று நான் சொன்னபோது உனக்குச் சற்று வருத்தம் ஏற்பட்டது என்பது எனக்குத் தெரியும். ஆனால் நீ அதிலேயே இருந்து பழகிவிட்டதனால் உன் மூக்கும் செத்துவிட்டது. அதனால் அரண்மனையில் வீசும் துர்நாற்றம் உனக்குப் புலப்படவில்லை'' என்றார். □

அழுக்கற்ற துணியினால் வடிகட்டின தண்ணீரைத் தவிர மற்றத் தண்ணீரைக் குடிக்காதிருக்கும்படி கண்ணபிரான் உத்தவருக்கு உபதேசித்திருக்கிறார். —பாகவதம்

நான்கு வேதங்களையும் கற்று எல்லாச் சுருதி ஸ்மிருதிகளிலும் நிபுணர்களாக இருந்தாலும், பாயசத்தைப் பரிமாறும் அகப்பை எப்படி அதன் ருசியைச் சிறிதும் அறிவதில்லையோ அது போலத்தான் ஆத்மஞானமில்லாதவர்கள். —உத்தர கீதை

# கடவுளோடு வாழ்ந்தவர்

சுவாமி கம்பீரானந்தர்

ஒரு நாள் பத்துமணிக்கு ஸ்ரீராமகிருஷ்ணர் ராக்காலைத் தம்முடன் அழைத்துக்கொண்டு காமார்ஹாடி சென்றடைந்தார். கோபாலனின் அன்னை மிகுந்த மகிழ்ச்சியில் திளைத்துப் போய்த் தம்மால் இயன்றவரை அவருக்கு ஆகாரங்களைத் தயாரித்தார். ஸ்ரீராமகிருஷ்ணருக்கும் ராக்காலுக்கும் தத்தரின் வரவேற்பு அறையில் விரிப்புகளை விரித்து உட்கார வைத்து, பின் சமைக்க ஆரம்பித்தார். சமைத்த உணவுகளை அவர்களுக்குப் பரிமாறி, பின்பு வீட்டின் தெற்கே உள்ள அறையில் தம் கட்டிலின் மீது நல்ல துணியை விரித்து அங்கு அவரை ஓய்வெடுக்கச் செய்தார். ராக்காலும் அருகிலேயே படுத்துக் கொண்டார்.

அப்பொழுது ஸ்ரீராமகிருஷ்ணரின் மூக்கிற்கு ஏதோ ஒரு துர்நாற்றம் எட்டியது. அறையின் மூலைகளில் தேடிப் பார்த்ததில் இரண்டு எலும்புக்கூடுமயமான பிரேதங்கள் நின்று கொண்டு முறையிட்டன. ''நீங்கள் ஏன் இங்கு வந்தீர்கள்? இங்கிருந்து போய் விடுங்கள். உங்கள் எதிரே இருப்பது எங்களுக்கு மிகவும் கஷ்டத்தைக் கொடுக்கிறது'' என்றன. ஸ்ரீராமகிருஷ்ணர் உடனடியாக அவ்விடம் விட்டு அகன்றார். ராக்காலும் கூடவே சென்றார். ஆனால் கோபாலனின் அன்னையிடம் ஸ்ரீராமகிருஷ்ணர் எதுவும் கூறவில்லை. ஏனெனில் அவர் அவ்விடத்திலேயே வசிக்க வேண்டியிருந்ததனால்தான். பின்பு ராக்காலிடம் எல்லாவற்றையும் கூறினார்.

ஸ்ரீராமகிருஷ்ணர் இப் பூவுலகில் தமது லீலைகளை ஒடுக்கிச் சென்றபின், அகோரமணி சோகத்தால் மயங்கினவராக சதாசர்வகாலமும் கோபாலனின் நினைவிலேயே மூழ்கியிருந்தார்.

கோபாலனின் அன்னை பல முறை பல உயிரினங்களில் கோபால சாட்சாத்காரத்தை உணர்ந்திருக்கிறார். இதனிடையில் ஒரு முறை மகேச்வரத் திருவிழாவிற்குச் சென்றபோது ரதம், அதன்மீது அமர்ந்திருந்த ஜகந்நாதர், ரதத்தை இழுக்கும் மாந்தர், தரிசனத்திற்காக வந்திருந்த பக்தர் கூட்டம் ஆகிய அனைத்தையுமே கோபாலனின் வெவ்வேறு உருவங்களாகக் கண்டார். இந்த அனுபவத்தைப் பற்றி ஒரு பக்தையிடம், ''அப்போது நான் என்னிடமே இல்லை; ஆடிப் பாடி அமர்க்களம் செய்தேன்'' என்று கூறினார்.



மற்றொரு நாள் உணவருந்தும் சமயம் அவர் கோபால சிந்தையில் மயங்கி, அங்கு வந்திருந்த பெண்மணி ஒருத்திக்குத் தம் கையாலேயே உணவு ஊட்டத் தொடங்கிவிட்டார்.

பல காட்சிகளைக் கண்டதன் பயனாக அகோரமணிதேவியின் மனம் மிகவும் பண்பட்டிருந்தது. ஸ்ரீராமகிருஷ்ணர் தட்சிணேசுவரத்தில் தமது லீலைகளை நடத்திக்கொண்டிருந்தபோது, ஒரு நாள் நரேந்திரன் ஒரு கிண்ணம் பிரசாதம் உண்டு எழுந்து சென்றபோது, ஸ்ரீராமகிருஷ்ணர் அங்கிருந்த ஒரு பெண்மணியிடம் சாப்பிட்ட இடத்தைச் சுத்தம் செய்யச் சொன்னார். அப்பொழுது கோபாலனின் அன்னை தாமாகவே முன் வந்து அந்த வேலையைச் செய்து முடித்தார்.

இதைக் கண்ட ஸ்ரீராமகிருஷ்ணர் ஆனந்தத்தோடு, ''பார் பார், ஒவ்வொரு நாளும் மனம் எத்தனை விரிவடைகிறது, பார்!'' என்றார். சுவாமி விவேகானந்தர் வெளிநாட்டிலிருந்து மேலைநாட்டுச் சிஷ்யர்களோடு திரும்பிய பின் ஒரு நாள் கோபாலனின் அன்னையிடம், ''எனக்கு அநேக முஸ்லிம் சிஷ்ய சிஷ்யைகள் இருக்கிறார்கள். அவர்களை உங்கள் அருகே வர அனுமதிப்பீர்களா? இல்லை, உங்கள் ஜாதி நாசமாகிவிடுமா?'' என்று கேட்டார். உடனே இவர், ''அதென்ன அப்பா! அவர்கள் உன் குழந்தைகள். அவர்களை நான் ஆதரவோடு பேரன் பேத்தி என்று மடியில் அமர்த்திக் கொள்வேன். உனக்கு அந்த அச்சம் தேவையே இல்லை'' என்று பதில் கூறினார்.

உண்மையிலேயே கோபாலனின் அன்னை முதல்முதலாகச் சகோதரி நிவேதிதையை சுவாமி ஸதானந்தருடன் பாக்பஜாரில் சந்திக்க நேர்ந்தபொழுது, ''ஓ குப்தா, இவள் யாரப்பா? நரேனின் மகளா? உன்னுடன் வந்திருக்கிறாளா?'' என்று வினவினார். தமது ஊகம் சரிதான் என்று அறிந்த பின் அகோரமணிதேவி நிவேதிதையின் மோவாயைத் தொட்டு முத்தம் கொடுத்து அவளுடைய வலக் கையைப் பிடித்துக் கொண்டு நடக்கத் தொடங்கினார்.

ஸ்ரீமதி ஸாராபுல், ஸ்ரீமதி மக்லாவுட், சகோதரி நிவேதிதை முதலியவர் ஒரு நாள் படகில் காமார்ஹாடி சென்றனர். கோபாலனின் அன்னை அவர்களை அன்புடன் தமது கட்டிலில் அமர்த்தி அவர்களின் மோவாயைத் தொட்டு முத்தம் கொடுத்தார். பின்பு பொரி, தேங்காய் லட்டு முதலியவற்றைத் தின்பதற்குக் கொடுத்தார். வெளிநாட்டுப் பெண்மணிகளும் அவற்றை மகிழ்ச்சியோடு சாப்பிட்டனர்; ஆனந்தத்தில் அமிழ்ந்தனர்.

அவர்கள் மூலமாகவே அனைத்தையும் கேள்வியுற்ற சுவாமி விவேகானந்தர், ''ஆகா! நீங்கள் பழம்பெரும் பாரதத்தின் மகத்தான லட்சியத்தைக் கண்டுவிட்டு வந்திருக்கிறீர்கள்! உபாசனை, கண்ணீர் சொரிதல், உபவாசம், விழிப்புநிலை, பிரம்மசரியம், தவம் முதலியவை அடங்கிய பாரதம் மறைந்துகொண்டிருக்கிறது. அது திரும்ப வராது'' என்றார்.

ஸ்ரீராமகிருஷ்ணரின் பிரத்தியட்ச லீலைகள் இவ்வுலகில் முடிந்தபின், கோபாலனின் அன்னை இடையிடையே பலராம் பாபுவின் வீட்டிற்குச் சென்று வசிப்பதுண்டு. அந்தச் சமயங்களில் அடிக்கடி தின்பண்டங்கள் விற்கும் கடைக்கு அவர் செல்வதைக் கண்டதுண்டு. அப்போது பெண்மணிகள் இடுப்பில் குழந்தையைச் சுமந்து செல்வது போலவே அவரும் நடப்பார். பிறர் கண்ணுக்குப் புலப்படாத தம் கோபாலனுடன் உரக்கப் பேசிக்கொண்டே செல்வார். ''தின்பாய்! தின்பாய்! தின்னு, தின்னு! எத்தனை தின்ன முடியுமோ தின்னு. என்னால் என்னத்தைத் தான் வாங்கித் தரமுடியும்?'' என்பார்.

அகோரமணிக்குப் பிரியமானதொரு பூனை இருந்தது. அதனிடமும் கோபாலனைக் காண அவரால் முடிந்தது. ஒரு நாள் பஸுபாரா தெரு 17-ஆம் நம்பர் வீட்டில் நிவேதிதாவின் தோளில் பூனை படுத்திருந்தது. நிவேதிதையோ மாற்றம் ஏதுமின்றி இருந்தார். ஆனால் வேலைக்காரி அதை விரட்டியபோது கோபாலனின் அன்னை, ''என்ன செய்கிறாய் அம்மா? என்ன செய்கிறாய்? கோபாலன் போய்விட்டான் பார், போய்விட்டான்'' என்று அங்கலாய்த்தார்.

கோபால நினைவிலேயே மூழ்கிவிட்ட அகோரமணி தமது உடல் மறைவிற்குச் சில நாள் முன்பிருந்தே, ''நான் சாப்பிடுவேன், நான் தூங்குவேன்'' என்று சொல்வதற்குப் பதிலாக, ''கோபாலன் சாப்பிடுவான், கோபாலன் தூங்குவான்'' என்று பேசும் நிலை ஏற்பட்டது.

அது மட்டுமல்லாமல் அவரது முழு அறிவும் கோபாலனாகவே இருந்தது. 1889-ஆம் ஆண்டு இறுதியில் அவர் பலராம் பாபுவின் வீட்டில் தங்கியிருந்த சமயத்தில் ஒரு மாலை நேரம் அநேக பக்தர்கள் அவரைச் சூழ்ந்து பலவிதக் கேள்விகள் கேட்டுக்கொண்டிருந்தனர். அப்போது அவர், ''ஐயா! நானோ பெண்; அதிலும் வயதாகிவிட்டது. உங்கள் சாஸ்திரங்களைப் பற்றியெல்லாம் எனக்கு என்ன தெரியும்? சரத், தாரக், யோகேன்

இவர்களிடம் போய்க் கேளுங்கள், போங்கள்'' என்றார்.

கேட்டவர்கள் மீண்டும் வற்புறுத்தியபோது அவர், ''அப்படியானல் இரப்பா. கோபாலனைக் கேட்கிறேன். ஓ கோபாலா கோபாலா! இவர்கள் ஏதோ கேட்கிறார்களே; எனக்கு ஏதாவது புரிகிறதா? நீயே இவர்களுக்குச் சற்றுப் பதில் சொல்லிக்கொடேன்'' என்றார். அதன்பின் கேள்விகள் கேட்கப்பட்டன. பதிலும் கொடுக்கப்பட்டது.

''கோபாலன் இவ்வாறு சொல்கிறான்'' என்பார். இடையிடையே மற்றவர்களைக் கவனியாமல் யாருடனே ஏதோ பேசுவார். இதுபோலச் சிறிது நேரம் போனபின், திடீரென்று கோபாலனின் அன்னை, ''ஓ கோபால், கோபால்! ஏன் நீ போகிறாய்? இவர்கள் கேட்பதற்குப் பதில் கூற மாட்டாயா?'' என்பார். கோபாலன் கிளம்பி விட்டான். இனி வினுக்களுக்கு விடை இல்லை.

இடையிடையே அகோரமணி, ஸ்ரீராமகிருஷ்ணரின் பக்தர்களான துறவிகளின் மடத்திற்குச் சென்று அவர்களுடைய வேண்டுகோளின்படி ஏதேனும் சமைத்து நிவேதனம் செய்வார். அந்தச் சன்னியாசிகளிடம் அவருக்கு ஈடற்ற தாயன்பு இருந்தது. சுவாமி விவேகானந்தர் தேகத்தியாகம் செய்தது பற்றித் தகவல் கிடைத்த பொழுது அகோரமணி காமார்ஹாடியில் தமது அறையில் நின்றுகொண்டிருந்தார்.

செய்தி அறிந்ததும் இவருடைய உடல் நடுங்கத் தொடங்கியது. தலை சுற்றியது. கண்ணுக்கு ஒன்றும் தெரியவில்லை. ''ஓ! நரேன் இல்லையா?'' என்று சொல்லிக்கொண்டே தரையில் விழுந்துவிட்டார். அப்படி விழுந்ததனுல் முழங்கை எலும்பு முறிந்து சில நாள் கட்டுப் போட்டு வைக்க நேர்ந்தது. ○



## கடவுள் காப்பு

ஒரு சமயம் ஒரு பண்டிதர் திக்விஜயம் செய்து அநேக பண்டிதர்களை வென்று அதிகப் பொருள்களுடன் ஊர் திரும்பிக்கொண்டிருந்தார்.

அப்பொழுது வழியில் பல திருடர்கள் அவரைச் சூழ்ந்துகொண்டார்கள். பண்டிதர் உடனே கண்ணை மூடிக்கொண்டு ஸ்ரீராமசந்திரப் பிரபுவைத் தியானம் செய்ய ஆரம்பித்தார். அப்படி அவர் செய்ய ஆரம்பித்ததுதான் தாமதம், வில்லேந்திய ஒரு வீரபுருஷன் பண்டிதருக்குப் பக்கத்தில் அவருக்குக் காவலாக நிற்பதுபோல் திருடர்களுக்குத் தோன்றியது.

உடனே திருடர்கள் அவர் காலில் விழுந்து, ''பண்டிதரே! எங்களைக் காப்பாற்றுங்கள். உங்கள் பக்கத்தில் வில்லேந்தி நிற்கும் வீரபுருஷன் எங்களைக் கொன்று விடுவானே என்று பயமாக இருக்கிறது'' என்றார்கள். உடனே பண்டிதர், 'ஆகா! நம்முடைய பொருளைக் காக்க, பகவான் இப்படி வேஷம் போட்டுக்கொண்டு வரவேண்டியதாகிவிட்டது, பார்த்தாயா?' என்று நினைந்து மனம் உருகினார்.

உடனேயே அவர் காசி சென்று சந்நியாசம் வாங்கிக்கொண்டு ஸ்ரீதர ஸ்வாமி என்ற பெயருடன் திகழ்ந்தார்.

# மனுஸ்மிருதியில் சில கருத்துக்கள்

தமிழில்: 'அண்ணா' சுப்ரமண்யம்

ஓர் அரசன் தண்டிக்கத் தகாதவர்களைத் தண்டித்தாலும், தண்டிக்கத் தக்கவர்களைத் தண்டிக்காவிட்டாலும் இந்த உலகில் கெட்ட பெயரையும் மறுவுலகில் நரகத்தையும் அடைவான்.

அரசன், யமதர்மராஜனைப் போல், சொந்த விருப்பு வெறுப்பை நீக்கி, கோபத்தை விட்டு, இந்திரியங்களை அடக்கி, தன்னடக்க மான முறையில் நடந்துகொள்ள வேண்டும்.

காமத்தையும் கோபத்தையும் விலக்கி, எவன் தருமங்களைத் தருமமுறையில் காண் கிறானோ அவனை, நதிகள் சமுத்திரத்தை நாடுவது போல, மக்கள் நாடியடைவார்கள்.

ஒரு பொருளை வேறொரு பொருளுடன் கலந்து உரு மாற்றியதும், சாரமற்றதும், அளவு குறைந்ததும், தூரத்தில் பதுக்கி வைக்கப்பட்டதும் விற்பனைக்கு உரியனவாக மாட்டா. அப்படிச் செய்யும் வியாபாரிகள் அரசதண்டனைக்கு உரியவர்கள்.


மக்களைக் காப்பாற்றாமல் வரி வாங்கும் அரசன் எல்லா மக்களும் செய்த பாவம் அனைத்தையும் தானே வாங்கிக் கொள் கிறான்.

நிறுக்கும் தராசு, அளக்கும் படி முதலி யவை எல்லாம் அரசனால் நன்கு முத்திரை போடப்பட வேண்டும். ஆறு மாதங்களுக்கு ஒரு முறை மீண்டும் மீண்டும் அவற்றைப் பரீட்சிக்க வேண்டும்.

உரிய காலத்தில் கன்னிகாதானத்தைச் செய்யாத தந்தை உலக நிந்தைக்கு உரிய வனாவான்; மனைவியைக் கவனிக்காமலி ருக்கும் கணவன் நிந்தைக்கு உரியவனா வான்; கணவனை இழந்தபின் தாயைக் காப்பாற்றாத மகன் நிந்தைக்கு உரியவன்.

சிறிதளவாக இருந்தாலும் கெட்ட சகவாசத்திலிருந்து ஸ்திரீகள் கவனத்துடன் காப்பாற்றப்பட வேண்டும். அவ்விதம் காப்பாற்றப்படாவிட்டால் அவர்கள் பிறந்த குலம், புகுந்த குலம் ஆகிய இரண்டிற்கும் துன்பத்தைக் கொண்டு வருவார்கள்.

மக்களைப் பெற்று வளர்க்கும் மகா பாக்கியசாலிகளும், பூஜைக்கு உரியவர் களும், வீட்டிற்கு விளக்குப் போன்றவர்களும் ஆகிய ஸ்திரீகளுக்கும் லட்சுமிதேவிக்கும் வீடுகளில் சிறிதும் பேதமில்லை.



தவத்தின் மகிமையால் ஒவ்வொரு யுகத் திலும் தாழ்ந்த ஜாதியில் பிறந்தவர்களும் மேன்மையை அடைகிறார்கள். அது இல்லாமையால், மனிதப்பிறவியில் தாழ்மை யையும் அடைகிறார்கள்.

அகிம்சை, சத்தியம், திருடாமை, பரிசுத்தம், புலனடக்கம் ஆகியவற்றை நான்கு வருணத்தாருக்கும் பொதுவான தர்மமாக மனு கூறியுள்ளார்.

வேதத்தில் விதிக்கப்பட்ட கருமங்களைச் செய்யாதவனும், நிந்திக்கப்பட்டதைச் செய்பவனும், இந்திரியவிஷயங்களில் அதிகப் பற்றுள்ளவனும் பிராயச்சித்தத்தை அனுஷ் டிக்க வேண்டும்.

விரும்பாமல் செய்த பாவம், வேதமோதுவதனல் போகும். விரும்பி, மதிகெட்டுச் செய்த பாவம், பலவிதப் பிராயச்சித்தங்களால் போகும்.

எப்பொழுதும் காயத்ரீ மந்திரத்தையும், புனிதமான ஸூக்தங்களையும் சக்திக்கு இயைந்தவாறு ஜபம் செய்ய வேண்டும்.

செய்த பாவத்தைப் பெரியோர்களிடம் ஒப்புக்கொள்வதனுலும், அதற்காக வருந்துவதனுலும், தவத்தினுலும், அத்தியயனத்தினுலும், ஆபத்துக் காலத்தில் தானம் செய்வதனுலும், பாவம் செய்தவன் பாவத்திலிருந்து விடுபடுகிருன்.

பாவம் செய்ததை நினைத்து வருந்துவதனல் அந்தப் பாவத்திலிருந்து ஒருவன் விடுபடுவான். 'மீண்டும் இப்படிச் செய்யமாட்டேன்' என்று தீர்மானித்து, மனதைத் திருப்புவதனல் அவன் புனிதனுகிருன்.

எவ்வளவுக்கு எவ்வளவு பாவம் செய்தவனுடைய மனம் அவனுடைய தீய செயலை வெறுக்கிறதோ, அவ்வளவுக்கு அவ்வளவு அவனுடைய சரீரம் அந்தப் பாவத்திலிருந்து விடுபடும்.

பாவம் செய்தவன் அதற்கு வருந்துவதனல் அந்தப் பாவத்திலிருந்து விடுபடுகிருன். 'இனி அவ்விதம் செய்யமாட்டேன்' என்ற நிச்சயத்தால் அதிலிருந்து விடுபட்டு அவன் தூய்மை அடைகிருன்.

தேவலோக சுகமோ, மனிதபோக சுகமோ அனைத்திற்கும் தவமே வேர் போன்றது. தவமே நடுவும், தவமே முடிவும் என்று வேத ஞானம் படைத்த ஞானிகளால் கூறப்பட்டுள்ளது.

எது கடக்க முடியாததோ, எது அடைய முடியாததோ, எது வெல்ல முடியாததோ, எது செய்ய முடியாததோ அது எல்லாம் தவத்தால் சாதிக்க இயலும். தவத்தை எதுவும் மீற முடியாது.

மகாபாதகம் செய்தவர்களும், இன்னும் செய்யத் தகாத காரியங்களைச் செய்தவர்களும் நன்ருக அனுஷ்டிக்கப்பட்ட தவத்தாலேயே அந்தப் பாவங்களினின்று விடுதலை அடைகின்றனர்.

நாள்தோறும் சக்திக்கு இயைந்தவாறு வேதமோதுவது, பஞ்ச மகாயக்ஞங்களைச் செய்வது, பொறுமையைக் கைக்கொள்வது ஆகிய இவை மகாபாதகங்களால் ஏற்பட்ட பாவங்களையும் விரைவில் போக்கிவிடும். □

எழுதுவது நல்லது; சிந்திப்பது அதைவிட மேலானது. மதிநுட்பம் நல்லது; பொறுமை அதைவிட மேலானது.
—ஓர் அறிஞர்

கோடி நூல்களால் எது சொல்லப்படுகிறதோ அதை அரை சுலோகத்தில் கூறுகிறேன்: 'பிரம்மம் சத்தியம், உலகம் பொய். ஜீவன் பிரம்மமே, வேறன்று.'
—சங்கரர்



108 மணிகள் கொண்ட ஜபமாலை தலைத் தரமானது. 100, 54, 50 மணிகள் கொண்ட ஜபமாலை இடைத்தரமானது. 27, 25 மணிகள் கொண்ட ஜபமாலை கடைத்தரமானது. ஸ்படிக மணி ஜபமாலை சாம்ராஜ்யத்தை ஏற்படுத்தும். ருத்ராட்ச மாலை எல்லா விருப்பங்களையும் பூர்த்தி செய்யும். தர்ப்பை முடிச்சு ஆன்மஞானத்தைக் கொடுக்கும். பவழமாலை எல்லா உலகங்களையும் வசியப்படுத்தும். நெல்லிக்கனி மாலை மோட்சத்தைக் கொடுக்கும். தங்க மாலை பெருஞ் செல்வத்தைக் கொடுக்கும். முத்துமாலை எல்லா வித்தையையும் சித்திக்கச் செய்யும். நவரத்தினமாலை பகைவர்களுக்குப் பயத்தை ஏற்படுத்தும்.

# மாயை என்பது என்ன?

சுவாமி அமரானந்தர்

நிலையற்றுக் கணந்தோறும் மாறிக்கொண்டு இருப்பதை நிலைபேறுடையதாக எண்ணும் மதிமயக்கமே மாயை என்பது.

பிரகிருதி, அஞ்ஞானம், பிரபஞ்சம், இயற்கை, சக்தி ஆகியவை எல்லாம் ஒரு பொருள் உடையவை; அதாவது மாயாசக்தியாகும்.

பிரபஞ்சம் கணந்தோறும் மாறி அமைந்து கொண்டிருப்பது கண்கூடு. மாயை என்ற சொல்லிலேயே அதன் பொருள் அடங்கியிருக்கிறது. 'யா' என்பது, எது என்றும், 'மா' என்பது, மாறிக்கொண்டிருப்பது என்றும் பொருள்.

அகில உலகையும் ஒருங்கே கண்கொண்டு பார்க்கும்பொழுது அது கணந்தோறும் மாறிக் கொண்டிருக்கும் ஒரு பெரிய உயிரோவியமாக இருப்பது தெரியும். அதனை, 'புவனம் கடந்த உள்ளத்தின் மேல் அழகு ஒழுக எழுதிய உயிரோவியம்' என்று வர்ணிக்கிறார் பக்தர் ஒருவர். 'புவனம் கடந்த உள்ளம்' என்பது மெய்ப்பொருள். திரையின் மேல் நிழற்படக் காட்சி தென்படுவது போன்று இந்தச் சக்தி யாகிய உயிரோவியம் மெய்ப்பொருளை ஆதார மாகக் கொண்டே இயங்குகிறது.

'பிரம்ம ஸத்யம், ஜகத் மித்யை' என்பது ஆப்த வாக்கியம். எது எல்லாக் காலங்களிலும் நிலைபெற்றுத் தோன்றிக்கொண்டிருப்பதில்லையோ அது மித்யை ஆகிறது. மித்யை என்பது பொய்த் தோற்றம்.

விழிப்பில் உள்ள ஜகத் ஆகிய பிரபஞ்சம் கனவில் மறைந்துவிடுகிறது. அங்கு வேறு ஓர் உலகம் கற்பிக்கப்படுகிறது. சுழுத்தி யாகிய அயர்ந்த தூக்கத்தில் அதுவும் மறைந்துபோகிறது. எனவே அது மித்யை என்று அழைக்கப்பெறுகிறது.

உலகத்தை உண்மை என்று கருதும் வரை, மெய்ப்பொருள் ஞானம் உண்டாகாது. சாந்தியும் கிட்டாது. இதை, சிவபோகசாரம் அடியில் வருமாறு எடுத்துக்காட்டுகிறது:—

எத்தனைதான் கற்றாலும் எத்தனைதான்
கேட்டாலும்
எத்தனை சாதித்தாலும் இன்புறார்—சித்தமே
மெய்யாகத் தோன்றுகின்ற உலகவாழ்வு
அனைத்தும்
பொய்யாகத் தோன்றாத போது.

சங்கரர் மாயையைப் பற்றிச் சொல்லும் போது, அது 'ஸந்நபி அஸந்நபி' என்று அருளுகிறார். அதாவது, இருப்பது போலத் தோன்றும் அது இல்லை என்பது அதன் பொருள்.

பிரபஞ்சம் மித்யையாகும்பொழுது அதில் உள்ள எல்லாப் பொருள்களும் அதன் செயல்களும் மித்யையாகும். செப்பிடு வித்தைக்காரன் ஒரு கணத்தில் மாங்கொட்டையை நட்டு அதைச் செடியாக்கிப் பூத்துக் காய்க்கச் செய்கிறான். எனவே, அது ஜாலவித்தை அதாவது மாயாஜாலம் ஆகிறது. அங்ஙனமே இந்தப் பிரபஞ்சம் தோன்றி மறைவது மாயை; இதில் வாழும் ஜீவர்கள் அனைத்தும் மாயை. அவை உண்டு உடுத்துக் களித்து வாழ்வது மாயை.

படிப்பது, எழுதுவது, உபன்யாசம் செய்வது ஆகியவையும் மாயை. ஜீவர்களுடைய முன்னேற்றம் பின்னடைதல் யாவும் மாயை. அவை இறைவனை இச்சித்து அவனடி சேருதல் மாயை. இவை எல்லாம் இந்த மாயா சக்தியின் திருவிளையாடலான லீலாவிநோதங்கள் ஆகும்.

'வாழ்வாவது மாயம், அது மண்ணாவது திண்ணம்' என்பது ஞானவாக்கியம். மூலப் பொருளில் எந்த விதமான செயற்பாடும் இல்லை. அது இருந்தபடி இருக்கிறது. மனிதனது நிஜ சொரூபம் அந்த மூலப் பொருளாகும்.

நாமரூபமாகத் தென்படுவது யாவும் மாயை. மூலப் பொருளுக்குப் பெயர் உருவம் ஏதும் இல்லை. பெயர் உருவம் இல்லாத மூலப் பொருள் மனம் என்னும் மாயையின் வழியாகவும் புலன்களின் வாயிலாகவும் கோடிக் கணக்கான நாம ரூபங்களாகத் தன்னைத் தோற்றுவித்துக்கொண்டிருக்கிறது.

தீவிரமாகக் கடவுளை நம்பிப் போற்றி வருவதற்குத்தான் தவம் என்று பெயர்.

—ஒரு சாது

சிவலிங்கம் ஏன் வட்டவடிவமாக இருக்கிறது? வட்டவடிவமான சொருபத்துக்குத்தான் அடி முடி இல்லை; ஆதி இல்லை, அந்தமும் இல்லை. மற்றவற்றுக்கு உண்டு. முக்கோணத்துக்கு, சதுரத்துக்கு உண்டு. ஆதியந்தம் இல்லாத வஸ்து சிவம் என்பதை லிங்காகாரம் காட்டுகிறது. —சைவசமயம்

---

ஒருவனுக்குத் தான் ஜீவாத்மா என்ற எண்ணம் உள்ளவரை அதாவது உடல் சொரூபமாக எண்ணும் 'நான்' என்னும் அகந்தை உள்ளவரை, மாயை அவனை விட்டு விலகுவதில்லை. அகந்தை நீங்கும்பொழுது மாயையும் நீங்கிவிடுகிறது. இதை—

வல்லமையே காட்டுகின்ற மாமாயை
நான் ஒருவன்
இல்லையெனில் எங்கே இருக்கும் பராபரமே

என்று தாயுமானவர் விளக்குகிறார்.

இனி, கால தேச வர்த்தமானமாக இருப்பதும் மாயை. காலச்சக்கரம் நிலையில்லாமல் சுழன்றுகொண்டே இருக்கிறது. தோன்றுகிற அண்டங்கள் எல்லாம் இடமாகின்றன. இவையும் நாளடைவில் அடிபட்டுப் போய் விடுகின்றன. வர்த்தமானமாகிற காரியங்களெல்லாம் மாறுபட்டுக்கொண்டே இருக்கின்றன.

எனவே, கால தேச வர்த்தமானமாக இயங்கிக்கொண்டிருக்கும் இந்த இயற்கைச் சக்தியும் மாயையாகும்.

இந்த மாயையின் தன்மையை அறிந்து, அதில் மயங்காமல் மேல்நிலையடைந்த சில சான்றோர்களின் தன்மையை, சுவாமி விவேகானந்தர் விளக்குகிறார்:—

''உலகத்தில் இருந்த எத்தனையோ பெரிய மனிதர்கள், ஒருவராலும் அறியப்படாமல் தமது வாழ்நாளைக் கழித்துக்கொண்டு போய் விட்டனர். உலகம் அவர்களை அறியவில்லை, அந்தப் பெரியவர்களோடு ஒப்பிட்டுப் பார்க்கும்பொழுது கிறிஸ்து, புத்தர் ஆகியோர் இரண்டாம் படியில் வைக்கப்பட வேண்டியவராவர்.

''சாத்துவிக புருஷர்களாகிய பெரியோர் கடவுளுக்கு மிகவும் சமீபத்தில் இருப்பவர் ஆதலின், சண்டையிடுவதும், துன்பப்படுவதும், போதிப்பதும், நாம் சொல்லுகிற விதமாக உலகினருக்கு உதவிபுரிவதும் அவர்களுக்கு இயல்பல்ல. முயற்சி புரிபவர் எவ்வளவு நல்லவர்களாக இருந்தாலும், சிறிதளவு அறியாமை மிஞ்சியிருப்பார்கள். சிறிதாவது பற்றும், ஏதாவது ஒருவகைக் காரணமும் தூண்டினாலன்றி முயற்சி நடந்தேருது.''



இது விவேகானந்தரின் உறுதியான உண்மையான வாக்கு ஆகும். மாயையே அஞ்சி மறையும் தூய ஞானம் படைத்தவர் சுவாமிஜி அவர்கள்.

தங்களை வெளியுலகுக்குக் காட்டிக்கொள்ளாத சான்றோர், ஸ்ரீராமகிருஷ்ணர் பகருவது போன்று, வேதத்தில் காண்கிற ஹோமாப் பறவைக்கு ஒப்பாவர். ஹோமாப் பறவைகள் வானத்திலேயே வாழ்ந்துகொண்டிருக்கின்றன; ஒருநாளும் தரைக்கு இறங்கி வருவதில்லை.

மாயையின் இரு கூறுகள்

அவித்யா மாயை என்றும், வித்யா மாயை என்றும் மாயை இரு கூறுகளாகப் பிரிக்கப் பெறுகிறது. வேதாந்த பரிபாஷையில் அவை ஆவரணம் விட்சேபம் என்று சொல்லப்பெறுகின்றன.

ஆவரணம் என்பது தன்மறைப்புச் சக்தி ஆகும். அதாவது, மனிதனது உண்மைநிலை யாகிய நிஜ சொருபத்தை மறைப்பதாகும். இந்த மறைப்புச் சக்தி, பிரபஞ்சத்தில் தோன்றிய புகழ்பெற்ற பெரியவர்களையும் தங்களின் உண்மைசொருபத்தைக் காண விடாமல் மறைத்திருக்கிறது.

புத்தமதமும் நாஸ்திகமதமும், 'மாயைக்கு அப்பால் ஒன்றும் இல்லை, சூனியமே' என்று சொல்லுகின்றன. சூனியத்துக்கு அப்பால் சூனியத்தைக் கண்டுகொண்டிருக்கும் தாம் இருப்பதை அவை மறந்துவிடுகின்றன. ஏனெனில், தங்களை உடல்சொருபமாக எண்ணிக்கொண்டிருப்பதனல், உடலுக்கு அப்பால், தன்னில் தானுய் உள்ள தங்கள் நிஜ சொருபத்தை உணர முடியாற் போகிறது. தனக்கு அந்நியமாக இன்னெரு பொருள் இருப்பதாக எண்ணி, அதை அடையச் சாதனைகள் செய்கின்றனர். அந்த எண்ணம் இருக்கும்வரை அந்த ஜீவனிடத்தில் அறியாமை சிறிது குடிகொண்டிருக்கிறது. 'தன்னை மகிழ்விக்க இன்னெருவர் வேண்டுமென்று உள்ளவரை நாம் அடிமைகளேயாவோம்' என்பதும் சுவாமிஜி அவர்களின் அருளுரையாகும்.

மனிதனது நிஜசொருபமே பேரறிவு, பிரக்ஞானம், பிரம்மம், பரப்பிரம்மம், மெய்ப்பொருள், பரம்பொருள் என்று பல பெயர்களால் அழைக்கப்பெறுகிறது. பிரம்மத்தை உணரவிடாமல், கார்காலத்து இருட்டுப் போல மூடுவது மாயா சக்தியின் இந்த ஆவரணக் கூறு என்பதால், அதை 'மறைப்பது, மிகப் பொல்லாது' என்று கைவல்ய சாஸ்திரம் விளக்குகிறது.

அடுத்து வருவது விட்சேப சக்தி. இது ஞானப் பிரதிபந்தகம் என்றும் பெயர் பெறுகிறது.

ஆவரணம் மறைப்புச் சக்தியாகவும், விட்சேபம் தோற்றச் சக்தியாகவும் இருக்கின்றன. பிரம்மத்தின் தோற்றம் மாத்திரமாக இருக்கும் இந்த மாயாசக்தி பிரபஞ்சமாகத் தோன்றி, ஜகன்மோகினியாக இருந்து, 'என்னைப் பார், என் அழகைப் பார்' என்று ஜீவர்களைத் தங்கள் புலன்களின் வாயிலாகப் புறத்தே இழுத்து, அவற்றைப் புசிக்க வைத்துப் பொசுக்கி அல்லல்களுக்கு ஆளாக்குகிறது.

'உலக வாழ்வு என்கிற தீயிடை நின்று நான் உருகினது போதுமம்மா' என்று பதறுகிருர் பக்தர் ஒருவர். தாய் ஒருத்தி தன் அலுவல்களைக் கவனிக்கும்பொருட்டு, குழந்தைகளுக்கு விளையாட்டுப் பொம்மைகளைக் கொடுத்து விளையாடச்செய்து தன்னை மறந்திருக்கச் செய்வது போன்று ஆகும் இது. செப்பிடு வித்தையைப் பார்ப்பவர், அந்த ஜாலவித்தையிலேயே மயங்கி நின்று, அந்த ஜாலவித்தையைக் காட்டுபவன்தான் மூல காரணம் என்பதைக் கவனிப்பதில்லை. அங்ஙனம் இந்த மாயாசக்தியின் விளையாட்டில் மனதைப் பறிகொடுத்த ஜீவர் அதன் மூலப் பொருளான மெய்ப் பொருளைச் சிந்திப்பதில்லை.

அந்த மெய்ப்பொருளே பிரக்ஞானம் அதாவது பேரறிவு ஆகும். எனவே, இந்த விட்சேபம் மெய்ப்பொருளை மறைக்கும் ஞானப் பிரதிபந்தகமாகவும் இருக்கிறது. 'ஆராமஸ்ய பச்யந்தி, ந தம் பச்யதி கச்சநேதி—அதாவது, அவனுடைய லீலாவிநோதமாகிய விளையாட்டு வனத்தைப் பார்த்து எல்லோரும் ரசிக்கின்றனர். அவனைப் பார்ப்பார் யாருமில்லை' என்பது உபநிஷத் வாக்கியம்.

விளையாடிச் சலித்துப்போன குழந்தைக்குத் தாயின் நினைவு வந்துவிட்டால், பொம்மைகளை வீசி எறிந்துவிட்டு, 'ஓ'வென்று கதறித் தாயைக் கூவி அழைக்கிறது. அப்பொழுது தாய் சமையலறையில் கஞ்சி வடித்துக்கொண்டிருந்தாலும் அதை விட்டு ஓடோடி வந்து குழந்தையை எடுத்து அணைத்துக்கொள்ளுகிருள். அங்ஙனம் உலக வாழ்வு என்னும் விளையாட்டுச் சலித்துப் போய், பரமனை நாடும் பாங்கு வந்துவிட்டால், இந்த மாயையின் விக்ஷேப சக்தியே வித்யா சக்தியாக இருந்து, ஜீவனுக்குத் துணைபுரிந்து, பரமனிடம் சேர்த்துத் தான் விலகிக்கொள்ளுகிறது.

தாய் தன் தனயனுக்கு, 'அதோ பார் உன் தந்தை' என்று காண்பித்து, தக்க வயது வந்தவுடன் தகப்பனிடம் சேர்த்துவிடுகிருள். ராமாயணம் இதற்குத் தக்க சான்ருகும். சீதா தேவி என்ற மாயாசக்தி குச லவர்களாகிய மைந்தர்களைப் பெற்றெடுத்து, நன்கு வளர்த்து, தக்க வயது வந்தவுடன் ராமனுகிய பரம்பொருளிடம் சேர்த்துவிட்டுத் தான் விலகிக்கொள்ளுகிருள்.

அஜாதவாதம்

இந்த அஜாத சித்தாந்தம், 'மாயை என்ற ஒன்று இல்லவே இல்லை' என்கிறது. அஷ்டா வக்ர ஸம்ஹிதை இதைப் போதிக்கிறது. 'பஹு நாத்ர கிமுக்தேந யோகத்ருஷ்ட்யா ந கிஞ்சந—அதாவது, சுருக்கமாகச் சொன்னுல், யோகதிருஷ்டியில் யாதும் எஞ்சியிருப் பதில்லை' என்பது அதன் கோட்பாடு ஆகும். கைவல்ய நவநீதமும் இதை விளக்குகிறது. அது சிருஷ்டியை முறையாகச் சொல்லி வந்து, இறுதியில் 'அது கற்பனை' என்கிறது.

கற்பனை வந்தவாறு காட்டினேம்
காண்பவெல்லாம்
சொற்பனம் என்றுதானே துணிந்தவன்
ஞானியாவான்

என்கிருர் அதன் ஆசிரியர்.

''உள்ளது ஒரு பொருள்; அது பிரக் ஞானம். அப்படி இருக்கும்போது மாயை என்பது எப்படி இருக்கும்?'' என்கிருர் பகவான் ரமண மகரிஷிகள். மேலும், 'உற் பத்தியும் நாசமுமில்லை, முக்தனுமில்லை பத்தனுமில்லை, பந்த முக்திகள் இல்லை, முமு க்ஷுவும் இல்லை, பரம்பொருள் ஒன்றே உள்ளது என்பதே அஜாத சித்தாந்தம்' என்றும் போதிக்கிருர்.

மாயையில் சிக்கிக்கொண்டிருக்கும்போது, 'இந்த மாயை ஏன் வந்தது? எப்படி வந்தது? எப்பொழுது வந்தது?' என்ற கேள்வி களுக்கெல்லாம் விடை கிடைக்காது. மாயை தாண்டினுல் இந்தக் கேள்விகளெல்லாம் அங்கு இல்லை. முற்றிலும் மௌனம் குடி கொண்டுவிடுகிறது.

நான் எனும் ஜீவபோதமாகிய அகந்தை நீங்கும்பொழுது, பரபோதம் தலையெடுத்து, மோனத்தை உண்டாக்கிவிடுகிறது. இதைத் தாயுமானவர்,

நான் என்று ஒருமுதல் உண்டு என்ற நான்
தலைநாண என்னுள்
தான் என்று ஒருமுதல் பூரணமாகத் தலைப்
பட்டு ஒப்பில்
ஆனந்தம் தந்து என் அறிவை எல்லாம்
உண்டு அவசம் நல்கி
மோனம்தனை விளைத்தால் இனி யாது
மொழிகுவதே?

என்று தம் மோன அனுபவத்தை விளக்கு கிருர். எனவே, மாயையைப்பற்றி, பேரறி ஞர்களின் கூற்று இதுவாகும்.

வாயை அடக்கி வாலறிவு பெற்ருல்
மாயை அதுவும் மாயமாய் மறையும்.
மாயை மனிதனை மயக்கிப் பின்னர்த்
தாயைப் போலவே தந்தையில் சேர்க்கும். □

---

யமன் ஒரு விநாடிகூட வீணுகக் கழிப்பதில்லை. ஒவ்வொரு விநாடியும் நெருங்கி வருகிருன். எப்போது பிடித்துக் கொள்வானே தெரியாது. கோவிந்தனுடைய காலைக் கட்டிக்கொண்டால்தான் யமனுல் நமக்குப் பயம் இல்லை. —சங்கரர்

இந்திய உபநிடதத்தின் ஒவ்வொரு வாக்கியத்திலும் ஆழ்ந்த சீரிய சிந்தனைகள் அடங்கியிருக்கின்றன. மகோன்னதமான தெய்விக தத்துவத்தினுல் அது வியாபிக்கப்பட்டி ருக்கிறது. உலகத்திலேயே உபநிடதத்தைப் போல் பலன் அளிக்கக்கூடியதும் மேன்மை யுறச் செய்வதும் வேறெதுவுமே இல்லை. உபநிடதம் என் வாழ்க்கையில் மகத்தான ஆறுதலை அளித்திருக்கிறது. என் மரணத்தின்போதும் அதுதான் ஆறுதலை அளிக்கும்.

—ஷோபஹண்வார்

# விஜயதீபம்

## துலங்குக வையகம்

அகர முதல எழுத்தாய் விளங்கி உலகெலாம் உணர்ந்து ஓதற்கரிய இறைவனின் திருவருளால் இயங்கி வரும் ஸ்ரீராமகிருஷ்ண விஜயத்திற்கு 61 ஆண்டு நிறைவு பெறுகிறது.

இறைவனின் திருவருளைப் பக்திபூர்வமாக வேண்டிப் பிரார்த்தித்து 'விஜயம்' தனது 62-ஆம் ஆண்டில் அடியெடுத்து வைக்கிறது.

இந்த ஆண்டிலும் கடந்த ஆண்டுகளைப் போலவே விஜயத்தின் பணி மக்களுக்குப் பயன்படுவதாக அமையத் திருவருளின் துணையை வேண்டி விஜயம் பிரார்த்திக்கிறது.

வாசகர்களாகிய பேரன்பிற்குரிய ஆன்மிகச் சகோதரசகோதரிகள் அனைவருக்கும் விஜயம் தனது ஆழ்ந்த அன்பையும் புத்தாண்டு பொங்கல் வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கிறது.

மல்குக வேத வேள்வி!
  வழங்குக சுரந்து வானம்!
பல்குக வளங்கள் எங்கும்!
  பரவுக அறங்கள்! இன்பம்
நல்குக உயிர்கட்கெல்லாம்!
  நான்மறைச் சைவம் ஓங்கிப்
புல்குக உலகமெல்லாம்
  புரவலன் செங்கோல் வாழ்க.

* * *

### இந்தியாவின் சிறப்பியல்பு

ஒரு நாடு வாணிபத்தில் உயர்வு பெற்றிருக்கும். மற்றொரு நாடு அரசியலில் உயர்வு பெற்றிருக்கும். பிறிதொரு நாடு பொருளாதாரத்தில் உயர்வு பெற்றிருக்கும். தொழில் வளத்தில் முன்னணியில் நிற்கும் நாடு உண்டு. இராணுவ பலத்தில் சிறந்து விளங்கும் நாடு உண்டு. விஞ்ஞான சாதனைகளில் முதலிடம் வகிக்கும் நாடு உண்டு—இப்படி உலக நாடுகளை ஒவ்வொன்றாக ஆராய்ந்து பார்த்தால் ஒவ்வொரு நாட்டுக்கும் உயிர்நாடியைப் போன்று ஒரு தனிச் சிறப்பு இயல்பாக அமைந்திருப்பதைக் காணலாம்.

இந்த வகையில் இந்தியாவிற்கென்று அமைந்துள்ள தனிச் சிறப்பு, ஹிந்துமதத்தின் உன்னதமான ஆன்மிகப் பண்பாடுகளே ஆகும்.

இந்தியநாட்டிற்கு நீர்வளமும் நிலவளமும் கனிப்பொருள் வளமும் இவை போன்ற பிற வளங்களும் செல்வங்களாகத் திகழ்கின்றன. செல்வத்துள் செல்வம் அருட்செல்வம். அதுபோல் இந்தியநாடு பெற்றிருக்கும் செல்வங்கள் அனைத்திலும் தலையாய செல்வமாகத் திகழ்வது நம் நாட்டில் தோன்றிய எண்ணற்ற மகான்களின் உன்னதமான ஆன்மிகக் கருத்துச் சுரங்கம் ஆகும்.

இந்த வகையில் உலகில் வேறு எந்த நாடும் இனமும் பெற்றிராத ஆன்மிகச் சிறப்பு ஹிந்துக்களுக்கு மட்டுமே உண்டு. இதைக் குறித்து இந்தியர்களாகிய நாம் எவ்வளவு வேண்டுமானாலும் பெருமை கொள்ளலாம்.

## இன்றைய நிலை

என்றைய தினம் பாகிஸ்தான் என்று பிரிக்கப்பட்டதோ அன்றைய தினமே பாரதத்தின் தேசீய மதம் ஹிந்துமதம்தான் என்று அறிவித்திருக்க வேண்டும்.

அதை அப்போது செய்யாமல் 'மதச் சார் பற்ற அரசு' என்று மன்னிக்கவே முடியாத இமாலயத் தவற்றைச் செய்துவிட்டோம். அதன்மூலம் பாரதத்தின் ஆன்மிகமும் பண்பாடும் சீரழிவதற்கு மறைமுகமாக அங்கீகாரம் அளிக்கப்பட்டுவிட்டது.

அதன் விளைவாகச் சுயநலம், ஒழுக்கமின்மை, நாத்திகம், தமோகுணம், அதர்மம், உள்ளத்தைச் சீரழிக்கும் பத்திரிகைகள், விகாரமான புத்தகங்கள், தரமற்ற திரைப்படங்கள், ஆரோக்கியமற்ற அரசியல் ஆகிய அரக்கர்களின் மத்தியில் பாரத அன்னை கலங்கி நிற்கும் நிலை வந்துள்ளது.

சுவாமி விவேகானந்தர் கூறுவதாவது:

''அரசியல், சமூக முன்னேற்றங்கள் எல்லாம் அவசியமல்ல என்று நான் சொல்லவில்லை. ஆனால் அவையெல்லாம் இந்த நாட்டிற்கு இரண்டாம் தரமான முக்கியத்துவமே உடையன என்றும், ஆன்மிகமே இங்குத் தலைசிறந்ததாகும் என்றும் நான் கூறுகிறேன். இதை நீங்கள் எப்போதும் உங்கள் நினைவில் பதித்து வைத்துக்கொள்ள வேண்டும்.

''உடலில் ஜீவரத்தம் தூயதாகவும், வன்மை பெற்றும் இருந்தால் நோய்க்கிருமி எதுவும் உடலில் உயிர் வாழ முடியாது. ஆன்மிக வாழ்க்கைதான் நமது நாட்டின் ஜீவரத்தமாக விளங்குகிறது. அந்த ஜீவரத்தம் தெளிவாக இருந்து, வலிமையுடன் ஓடினால் தேசத்தின் மற்ற எல்லாத் துறைகளும் சரியாக இருக்கும். அந்த இரத்தம் மட்டும் நல்ல ஆரோக்கியத்துடன் சுத்தமாக இருந்தால் அரசியல், சமுதாயம், பொருளாதாரம் முதலியவற்றிலுள்ள குறைபாடுகள் எல்லாம்—நாட்டின் வறுமைகூட—நீங்கி, தேசம் செழிப்பாக இருக்கும்.

''ஆன்மிகமே வாழ்க்கையின் மூல வேர் என்பதை நம்புங்கள். அது சரியாக இருந்தால் எல்லாம் சரியாகவே இருக்கும்.''

## ஹிந்து ஒற்றுமை

மொழி, ஜாதி, இருப்பிடம் போன்றவற்றைப் பெரிதுபடுத்தி வேற்றுமையை வளர்ப்பது தேசீயக் கண்ணோட்டத்தை இழக்கவும் தேசீய ஒற்றுமையைப் பாதிக்கவும் செய்கிறது.

எனவே குறுகிய மனப்பான்மை கொண்ட வேற்றுமைகளையெல்லாம் வேரும் வேரடி மண்ணுமின்றிக் களைந்தெறிந்துவிட்டு, ஹிந்துக்கள் தங்களிடையே ஒற்றுமையை வளர்த்துக்கொள்ள வேண்டும்.

தேள், பாம்பு முதலிய விஷ ஜந்துக்கள் நடமாடும் வீட்டில் இருப்பவர்கள் அந்த ஜந்துக்கள் எந்த விநாடியும் தங்களைத் தீண்டக்கூடும் என்று மிகவும் எச்சரிக்கையாகவே இருப்பார்கள்; இருக்கவும் வேண்டும். அதே போல் அரக்கர் போன்ற தீய சக்திகளுக்கு மத்தியில் ஹிந்துக்கள் மிக மிக விழிப்புடன் இருக்க வேண்டியது அவசியமாகும்.

ஹிந்துக்களில் சுமார் 20 சதவிகிதம் மக்கள் விழிப்புணர்ச்சியைப் பெற்றுவிட்டாலும், அதுவே பாரத தேசமும் ஹிந்து சமுதாயமும் வரவேற்கத் தக்க மறுமலர்ச்சியைப் பெற வழி செய்துவிடும்.

இந்தியாவில் இன்றும் ஹிந்துக்களே பெரும்பான்மையினர் ஆவர். எனினும் பாரதத்தில் ஹிந்து ஒருவன் தன்னை ஹிந்து என்று சொல்லிக்கொள்ளவே அஞ்சும் அவல நிலை வளர்ந்து வருகிறது.

ஹிந்து சக்தியை ஒன்றுதிரட்டுவது என்ற ஒன்றே ஒன்று மட்டுமே இப்போது பாரதத்திற்குப் பெரிதும் அவசியமாகத் தேவைப்படுகிறது. அதைச் செய்து சாதிக்க இயலுமானால் மற்ற எல்லா நன்மைகளும் ஒன்றன்பின் ஒன்றாகத் தாமாகவே வந்து சேரும் என்பது நிச்சயத்திலும் நிச்சயம்.

சுவாமி விவேகானந்தர் கூறுவதாவது:

‘‘ஹிந்து என்ற பெயரைக் கேட்ட மாத்திரத்திலேயே உங்களுக்குள்ளேயே சக்தி மின் அலையைப் போலப் பாய வேண்டும். அப்போதுதான்—அப்போது மட்டும்தான்—நீங்கள் ‘ஹிந்து’ ஆவீர்கள்.

‘‘ஹிந்து என்ற பெயர் தாங்கிய மனிதன், எந்த நாட்டைச் சேர்ந்தவனாக இருந்தாலும், நமது மொழியோ அல்லது வேற்றுமொழியோ பேசினாலும், அந்தக் கணமே உங்களுக்கு மிக மிக நெருங்கியவனாகவும் இனியவனாகவும் ஆகிவிட வேண்டும். அப்போதுதான்—அப்போது மட்டுமேதான்—நீங்கள் ‘ஹிந்து’ ஆவீர்கள்.

‘‘ஹிந்து என்ற பெயர் தாங்கிய மனிதனுக்கு ஏற்படும் துன்பம், உங்களது உள்ளத்தை வந்து தாக்கி, உங்களது மகனே துன்பப்படுவது போன்ற உணர்ச்சியை ஏற்படுத்த வேண்டும். அப்போதுதான்—அப்போது மட்டுமேதான்—நீங்கள் ‘ஹிந்து’ ஆவீர்கள்.’’

### நமது கடமை

தந்தை சொத்துச் சேர்த்து மகனுக்குக் கொடுத்துவிட்டு மறைகிறார். அந்தச் சொத்தை மகன் மேலும் விருத்தி செய்து அடுத்து வரும் தன் தலைமுறையினருக்குக் கொடுக்கிறான்.

இது போலவே இந்துமதம் என்ற பெருஞ் செல்வம் பகவான் ஸ்ரீராமகிருஷ்ணர், சுவாமி விவேகானந்தர் ஆகியோரின் கைக்கு ஒரு சமயம் வந்தது. அவர்கள் அதைக் குறைவு படாமல் காப்பாற்றியும், மேலும் விருத்தி செய்தும் அடுத்து வரும் தலைமுறையினருக்குக் கொடுத்துச் சென்றார்கள்.

ஸ்ரீராமபிரான் சேது சமைத்ததற்கு ஸ்ரீஆஞ்சனேயர் பெருமளவு தொண்டு புரிந்தார். அப்போது அணிலும் தன்னால் இயன்ற சிறு உதவியைச் செய்தது.

அது போலவே ஸ்ரீராமகிருஷ்ணர், சுவாமி விவேகானந்தர் போன்ற வரிசையில் அமைந்த பெரியோர் தாங்கள் வாழ்ந்த காலங்களில் இந்துமதத்தின் வளர்ச்சிக்கு ஸ்ரீஆஞ்சனேயரைப் போலவே பெருமளவு தொண்டு புரிந்தனர். நாம், நாம் வாழும் காலமாகிய இப்போது, அணில் போலவாயினும் இந்துமதத்தின் உயர்வுக்கு நமது பங்கைத் தொண்டாகச் செலுத்த வேண்டும்.

இந்துமதமும் பாரதப் பண்பாடும் ஒரு டிரஸ்ட் போல நம்மிடம் ஒப்படைக்கப்பட்டிக்கின்றன.

இந்துமதத்தின் உன்னதக் கருத்துக்களும் பாரதத்தின் புனிதம் மிக்க சம்பிரதாயங்களும் காலவெள்ளத்தையும் எதிர்த்து வாழையடி வாழையாக நம் தாயக மக்களை வாழ்வித்து வந்திருக்கின்றன. மனிதகுலத்தைத் தார்மிக வழியில் செலுத்திய அந்தச் சம்பிரதாயங்களை எல்லாம் நாம் கிரகித்து நம் மயமாக ஐக்கியப் படுத்திக்கொள்ள வேண்டும். அவ்விதமே பிறரும் அடுத்த தலைமுறையினரும் செய்வதற்கு உரிய சூழ்நிலையை நாம் வாழும் வாழ்க்கையின் மூலம் உருவாக்க வேண்டும்.

### தியாகமே வேண்டும்

மகாவிஷ்ணு வைகுண்டத்திலிருந்தே ராவணனை அழிக்கவில்லை; ராமபிரானாகப் பூவுலகில் பிறந்தே அவர் ராவணனை அழித்தார்; கண்ணபிரானாக அவதரித்துத் தர்மத்தை நிலைநாட்டினார்.

ராமாயணத்தில் தர்மம் தானாக ஜயித்து விடவில்லை; தர்மம் வெற்றி பெறுவதற்கு ராமபிரானின் வில் பின்னணியில் இருந்தது. அது போல் மகாபாரதத்தில் தர்மம் தானாக ஜயித்துவிடவில்லை; மகாபாரதத்தில் தர்மம் ஜயிப்பதற்குக் கண்ணன் துணையுடன் அர்ஜுனனின் காண்டீவம் இருந்தது.

எனவே, ‘இந்துமதத்தையும் பண்பாட்டையும் அழிக்கவே முடியாது; கடைசியில் தர்மம்தான் வெல்லும்’ என்று இந்துமதத்திற்காகவும் பண்பாட்டிற்காகவும் எந்த ஒரு முயற்சியிலும் தியாகத்திலும் ஈடுபடாமலே வாய் வேதாந்தம் பேசுவதில் பயனில்லை. மாறாக, உன்னத இந்தப் பாரம்பரியங்களுக்காக நடைமுறையில் உழைக்கக்கூடிய

தியாக வீரர்களாகிய செயல்வீரர்களே தேவை.

சிவபெருமான் உலக நன்மைக்காகக் கொடிய ஆலகால விஷத்தையும் தாம் ஏற்றுக் கொண்டார். ததீசி முனிவர் உலக நன்மைக் காகத் தம் முதுகெலும்பையும் தந்தார்—இந்த வகையில் அமைந்த வரலாறுகளெல்லாம் மனிதன் உலக நன்மைக்கான தியாகச் செயல்களை மேற்கொள்ள வேண்டும் என்பதையே உணர்த்துகின்றன.

பொது நன்மைக்காக மனிதன் தன்னைத் தியாகம் செய்துகொள்ள வேண்டும் என்பது இந்துமதம் கண்ட புராதன உண்மைகளுள் ஒன்றாகும். அந்த உண்மையின் அடிச் சுவட்டில் பாரதநாட்டின் மேன்மைக்காகவும் இந்துமதத்தின் உயர்வுக்காகவும் நம்மை நாம் தியாகம் செய்துகொள்ள முன்வர வேண்டும். பரோபகாரார்த்தம் இதம் சரீரம்—இந்த மனித உடல் பிறர்நலம் பேணுவ தற்காகவே அமைந்தது.

‘ஹிந்துசக்தியை நான் வளர்ப்பேன் என முன்வருவோர் வேண்டும்; மாபெரும் தியாகியர் படை வேண்டும்.’

‘இந்தியா உலகின் ஞானகுருவாக விளங்க வேண்டும்’ என்ற சுவாமி விவேகானந்தரின் கருத்தை ஈடேற்றும் பொறுப்பு இந்தியர் களாகிய நம்மையே சார்ந்திருக்கிறது. நம்முடைய முன்னேற்றம் நம்முடைய உழைப்பிலேயே அடங்கியிருக்கிறது.

பல துளி பெருவெள்ளம் போல் தனிமனிதர் பலர் செய்யும் ஹிந்துமதத் தொண்டு ஒட்டு மொத்தமாகப் பார்க்கும்போது பிரம்மாண்ட மான நற்பயனை விளைவிக்கும்.

பொதுநலத்திற்காகத் தங்களைத் தியாகம் செய்துகொள்ள வேண்டும் என்ற கருத்து நம்மிடையே இன்னும் போதிய அளவுக்கு வளராமலே இருக்கிறது.

சுவாமி விவேகானந்தர் கூறுகிறார்:—

‘‘உலகிற்கு யார் ஒளிதரப் போகிறார்கள்? பண்டைக் காலத்தில் தியாகம்தான் வாழ்க்கைக்கு உரிய விதியாக இருந்தது. இனி வரப்போகும் பலகோடி நூற்றாண்டு களுக்கும் இந்த விதி அப்படியேதான் இருக்கப்போகிறது. பலரின் நன்மைக்காக, அனைவரின் சுகத்திற்காக, உலகில் தைரிய மும் சிறப்பும் பெருமளவில் பெற்றிருப்பவர்கள் தங்களைத் தியாகம் செய்துகொண்டுதான் ஆகவேண்டும்.

‘‘பெரியவர்கள் பெருந் தியாகங்களைச் செய்கிறார்கள். அதன் விளைவாக வரும் நன்மைகளை மனிதகுலம் பெற்று அனுபவிக் கிறது. இந்த உண்மையை நீ உலக வரலாறு முழுவதிலும் காணலாம்.

‘‘மற்றவர்களுடைய நன்மைக்காக என்னுடைய இந்த வாழ்க்கை அழிந்து போகிற அந்த நாளும் வருமா? இந்த உலகம் வெறும் குழந்தை விளையாட்டு அல்ல. மற்றவர்களின் நன்மைக்காகத் தங்களுடைய இதயத்தின் இரத்தத்தைச் சிந்தி, பாதை அமைப்பவர்கள்தாம் பெரியோர் ஆவர். ஒருவர் தமது உடலைத் தந்து பாலம் ஒன்றை அமைக்கிறார். அந்தப் பாலத்தின் உதவி யால், பல்லாயிரக்கணக்கான மக்கள் அந்த ஆற்றைக் கடந்துவிடுகிறார்கள். இது நீண்ட நெடுங்காலமாக நடந்துகொண்டு வந்திருக் கிறது. இந்த முறை அப்படியே இருக்கட்டும். அப்படியே இன்றைக்கும் இருக்கட்டும்.’’

### ஒளி மிகுந்த எதிர்காலம்

பாரததேசத்தின் ஆகாய மண்டலம் முழுமையும் ஆன்மிகம் நிரம்பியிருக்கிறது. ஆன்மிகம் இந்த மண்ணில் ஊறி இரண்டறக் கலந்திருக்கிறது. ஆப்பிள் மரம் சென்னையில் வளராது; மாமரம் குளிர்ப்பிரதேசத்தில் வளராது. அவை அவற்றுக்கே உரிய சீதோஷ்ண நிலைகளில்தான் வளர முடியும். அதுபோல் கம்யூனிசமும் நாத்திகமும் இந்தப் பாரத மண்ணுக்கு ஒத்துவரா. அவற்றின் செல்வாக்கு, தாற்காலிகமானதாக மட்டுமே இங்கு இருக்க முடியும். இந்த மண்ணுக்கே உரியது ஆன்மிகம், ஆன்மிகம் மட்டுமே ஆகும். அது ஒன்றே என்றென்றைக்குமாக இந்த மண்ணில் நிலைத்திருக்கும்.

“பயங்கரத்தை எதிர்த்து நில். அஞ்சாமல் அதை எதிர்த்து நில். எழுந்து நின்று போராடு. ஓர் அடியும் பின்வாங்கவே கூடாது. எது வந்தாலும் போராடி முடி. கோழையாவதனால் நீ எந்த ஒரு பயனையும் பெறமாட்டாய். ஓர் அடி நீ பின்வாங்கு வதனால் எந்த ஒரு துரதிர்ஷ்டத்தையும் தவிர்த்துவிட முடியாது” என்கிறார் சுவாமி விவேகானந்தர்.

‘பேடித்தனத்தை உதறியெறிந்துவிட்டு ஆண்மையோடு எழுந்திரு’ என்று கண்ணன் அர்ஜுனனுக்குப் போதித்தான். கண்ண னின் உபதேசத்தை உள்ளத்தில் பதித்து அர்ஜுனன் போரில் வெற்றி கண்டான். அதே கீதோபதேசத்தை நெஞ்சில் பதித்து வாழ்க்கையாகிய போரைச் சிறப்பாக நடத்தி வெற்றி காண்போம். “யோகேசு வரனாகிய கிருஷ்ணன் எங்கே இருக்கிறானோ, வில்லாளியான அர்ஜுனன் எங்கே இருக் கிறானோ அங்கேதான் மங்களமும் வெற்றியும் பெருமையும், நிச்சயமாக நீதியும் என்பது எனது கொள்கை” என்று கீதை உறுதியான குரலில் முழங்குகிறது. தியாக வீரர்கள் ஏராளமாக உருவாகட்டும். பொருள்வளம் சிறக்கட்டும். மக்கள் மனதில் அமைதி நிலைத்து நிலவட்டும். தொல்லைகள் யாவும் தொலைந்து நன்மைகள் செழிக்கட்டும்.

ஆண்டவன் கையிலுள்ள நல்லதொரு கருவியாக விளங்கி நாமும் வாழ்ந்து பிறரையும் வாழ்விப்போமாக.

மக்கள் ஊக்கத்தோடும் உற்சாகத்தோடும் தன்னம்பிக்கையோடும் விளங்க ஆண்டவன் அருள்வானாக.

பரமனடிபாடிப் பாரினில் வாழ்வாங்கு வாழ்வோமாக. □

---

# செய்திகள்

□ காஞ்சிபுரம், ஸ்ரீராமகிருஷ்ண மடத்தில் நவம்பர் 8-ஆம் நாள் திருமுறை இன்னிசை விழா மிகவும் சிறப்பாக நடந்தேறியது. விழாவில் ‘மூன்றும் திருமுறையுள் அற்புதத் திருப்பதிகங்கள்’ என்ற நூல் வெளியிடப் பெற்றது.

□ ஆர்க்காடு, ஸ்ரீராமகிருஷ்ண வித்யா லயத்தில் நவம்பர் 20, 21, 22 ஆகிய தேதி களில் சுவாமி ராகவேசானந்தர் பகவத் கீதைத் தொடர்ச் சொற்பொழிவுகள் நிகழ்த் தினார்.

□ வேலூர் ஸ்ரீராமகிருஷ்ண—விவே கானந்த மன்றத்தின் சார்பாக, தோப்பா சுவாமி மடத்தில் 13—12—81 ஆம் நாள் காலை 10 மணி முதல் 1 மணி வரை சுவாமி கமலாத்மானந்தர் அந்தர்யோகம் நடத் தினார்.

□ ஆர்க்காடு, ஸ்ரீராமகிருஷ்ண—விவேகானந்த மன்றத்தின் சார்பாக ஸ்ரீராம கிருஷ்ண வித்யாலயத்தில் 13—12—81 ஆம் நாள் மாலை 3-30 மணி முதல் 6 மணி வரை சுவாமி கமலாத்மானந்தர் அந்தர்யோகம் நடத்தினார்.

□ ஹரித்துவார், கனகல் ஸ்ரீராமகிருஷ்ண ஆச்ரமத்தில் ஸ்ரீராமகிருஷ்ணர் கோவிலில் 6—12—81 ஆம் நாள் ஸ்ரீமத் சுவாமி வீரேச்வரானந்தஜி மகராஜ் அவர்கள் பகவான் ஸ்ரீராமகிருஷ்ணரின் சலவைக்கல் திருவுருவச் சிலையைப் பிரதிஷ்டை செய்தார். இந்த விழாவில் இந்தியாவின் பல பாகங்களி லிருந்தும் சாதுக்களும் பக்தர்களும் கலந்து கொண்டனர்.

□ ஒரிஸ்ஸா, ஆந்திரப் பிரதேசம், மேற்கு வங்காளம் ஆகிய இடங்களில் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்டோருக்கு வீடு களையும் பள்ளிக்கூடங்களையும் கட்டித் தரும் பணியை ஸ்ரீராமகிருஷ்ண மிஷன் ஏற்று நடத்தி வருகிறது.

# ஸ்ரீராமகிருஷ்ண மடம், சென்னை-600 004

## 1982 ஜனவரி மாத நிழ்ச்சிகள்

**ஸ்ரீமத் சுவாமி விவேகானந்த ஜயந்தி விழா :**

16-1-82 சனிக்கிழமை ஜன்மதிதி: விசேஷ பூஜை, பஜனை, ஹோமம் முதலியன (காலை 5 மணி முதல் 11 மணி வரை)

காலை 8-30 மணிக்கு சென்னை கடற்கரையில் நிறுவப்பட்டுள்ள சுவாமி விவேகானந்தரின் திருவுருவச் சிலைக்கு மலர்மாலைகள் அணிவித்தல்.
மாலை வழிபாட்டிற்குப் பிறகு 'சுவாமி விவேகானந்தரின் வாழ்வும் வாக்கும்' பற்றிய சொற்பொழிவுகள்.

17-1-82 ஞாயிறு : விவேகானந்த ஜயந்தி விழாப் பொதுக்கூட்டம்

மாலை 5-30 மணிக்கு தலைவர் : சுவாமி தபஸ்யானந்தர்

பேசுவோர் : திரு எம். எஸ். விஜயராகவன்
திருமதி ஆர். யோகாம்பாள் கோபாலன்

சத் சங்கம் : ஞாயிறுதோறும் மாலை 4 மணி முதல் 5-30 மணி வரை
ஸ்ரீலலிதா ஸஹஸ்ரநாம பாராயணம் (10-1-82 & 31-1-82)
ஸ்ரீவிஷ்ணு ஸஹஸ்ரநாம பாராயணம் (3-1-82 & 24-1-82)

| | | |
|---|---|---|
| 3-1-82 | 1. | ஸ்ரீமத் பாகவதம்—திரு 'அண்ணா' |
| 10-1-82 | 2. | ஸ்ரீவிஷ்ணு ஸஹஸ்ரநாமம்—திரு வி. ஆர். கல்யாணசுந்தர சாஸ்திரிகள் |
| 24-1-82 | 3. | ஸ்ரீலலிதா ஸஹஸ்ரநாமம்—திரு வி. எஸ். வி. குருஸ்வாமி சாஸ்திரிகள் |
| 31-1-82 | 4. | ஸ்ரீஆஞ்சநேயர்—திரு ஆர். கோதண்டராமன் |

மாலை 5-30 முதல் 6-30 மணி வரை

சுவாமி கபீரானந்தா 'பக்தி ரத்னாவளி' என்ற தலைப்பில் ஜனவரி 3, 10, 24, 31 ஆகிய ஞாயிற்றுக்கிழமைகளில் ஆங்கிலத்தில் சொற்பொழிவு நிகழ்த்துவார்.

வார நாட்களில் நடைபெறும் சொற்பொழிவுகள் (மாலை 5-30 மணிக்கு)

| | |
|---|---|
| திங்கள் | ஸ்ரீராமகிருஷ்ணரின் உபதேசங்கள்—சுவாமி அமிர்தானந்தர் |
| செவ்வாய் | கர்மயோகம் —சுவாமி கபீரானந்தர் |
| புதன் | ஆத்மபோதம் —சுவாமி பிரசாந்தானந்தர் |
| வியாழன் | ஆன்மிக வாழ்க்கை—சுவாமி கமலாத்மானந்தர் |
| வெள்ளி | உபநிஷதம்—திரு 'அண்ணா' சுப்ரமண்யம் |
| சனிக்கிழமை | அத்யாத்ம ராமாயணம்—திரு பி. ராமகிருஷ்ணன் (2-1-82 மட்டும்) |
| சனிக்கிழமை | ஸ்ரீஆஞ்சநேயர்—திரு ஆர். கோதண்டராமன் (23-1-82 மட்டும்) |

**விசேஷ தினங்கள் ;**

| | |
|---|---|
| 3-1-82 ஞாயிறு | அந்தர்யோகம் (காலை 9 மணி முதல் 12-30 வரை) |
| 20-1-82 ஏகாதசி | தினத்தில் மாலை வழிபாட்டிற்குப் பிறகு ஸ்ரீராமநாம சங்கீர்த்தனம் நடைபெறும். |
| 1-1-82 வெள்ளி | சுவாமி சாரதானந்த ஜயந்தி & கல்பதரு நாள் |
| 8-1-82 வெள்ளி | சுவாமி துரியானந்த ஜயந்தி |
| 27-1-82 புதன் | சுவாமி பிரம்மானந்த ஜயந்தி—மாலை வழிபாட்டிற்கு முன்பு ஸ்ரீராமநாம சங்கீர்த்தனம் நடைபெறும். |
| 29-1-82 வெள்ளி | சுவாமி திரிகுணாதீதானந்த ஜயந்தி |
| 30-1-82 சனி | வசந்த பஞ்சமி & ஸ்ரீ சரஸ்வதி பூஜை (மாலை வழிபாட்டிற்குப் பிறகு) |

வேறு சில நிகழ்ச்சிகள் :

மாதந்தோறும் முதல் ஞாயிற்றுக்கிழமையும் மூன்ருவது ஞாயிற்றுக்கிழமையும் காலை 10 மணிக்கு சுவாமி விபுதானந்தர் உரை நிகழ்த்துவார். இடம் : ஸ்ரீராமகிருஷ்ண-விவேகானந்த மன்றம், அரக்கோணம்.

மாதந்தோறும் இரண்டாவது சனிக்கிழமைகளில் மாலை 5-30 மணிக்கு சுவாமி விபுதானந்தர் உரை நிகழ்த்துவார். இடம் : 7, வெல்லீஸ் ரோடு, கீழ்ப்பாக்கம், சென்னை.

மாதந்தோறும் கடைசி ஞாயிற்றுகிழமைகளில் மாலை 5-30 மணிக்கு சுவாமி விபுதானந்தர் உரை நிகழ்த்துவார். இடம்: 34/1, எண்ணூர் நெடுஞ்சாலை, சென்னை-19.

மாதந்தோறும் மூன்ருவது ஞாயிற்றுக்கிழமைகளில் காலை 9-30 மணிக்கு 'ஸ்ரீராம கிருஷ்ணரின் உபதேசங்கள்' என்ற தலைப்பில் திரு வி. ராமமூர்த்தி உரை நிகழ்த்துவார்.

இடம் : H/28/F காமராஜர் நகர், திருவான்மியூர், சென்னை-41.

மாதந்தோறும் கடைசி ஞாயிற்றுக்கிழமைகளில் காலை 9-30 மணிக்கு, பெரம்பூர் அன்னதான சமாஜத்தைச் சேர்ந்த சுவாமி விவேகானந்தர் நூற்ருண்டு நினைவு மண்டபத்தில் 'ஸ்ரீராமகிருஷ்ணரின் உபதேசங்கள்' என்ற தலைப்பில் திரு வி. ராமமூர்த்தி உரை நிகழ்த்துவார்.

எல்லா ஞாயிற்றுக்கிழமைகளிலும் மாலை 4-15 மணிக்கு சுவாமி ராகவேசானந்தர் அவர்கள் சௌந்தர்ய லஹரி பாராயணமும் 'பகவான் ஸ்ரீராமகிருஷ்ணர்' என்ற தலைப்பில் சொற்பொழிவும் நிகழ்த்துவார். இடம் : 18, 9வது லேன், சாஸ்திரி நகர், சென்னை.

அனைவரையும் அனைத்து நிகழ்ச்சிகளிலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கிரேம்.

தலைவர்
ஸ்ரீராமகிருஷ்ண மடம்
சென்னை-600 004

தொலைபேசி
71231